Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

ராம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/790)

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 25 ஞாயிற்றுக்கிழமை (10.07.2011) பக்கங்கள் 16 ஓசை – 284



இறைவனைப் பிடிக்க வலை 04



அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை 05




இந்தியா இல்லாமல் வளர்ச்சி இல்லை 08



சமூக நிலைக்கு ஒத்துழைப்பு அவசியம் 09

# மக்களின் வாழ்வாதாரம் அரசு மிகுந்த கரிசனை

## தொடரும் அபிவிருத்தியால் நம்பிக்கை



(யாழ்ப்பாணம்)

யுத்தத்தால் சிதைந்துபோன வடபகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதிலும் அழிந்துபோன வடக்கின் உட்கட்டமைப்புக்களைப் புனரமைக்கும் வகையிலான செயற்திட்டங்களை மேற்கொள்வதிலும் மகிந்த ராஜயபக்ஷ தலைமையிலான அரசு மிகுந்த கரிசனையுடன் செயற்பட்டு வருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நுண்கடன் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தின் பயனாளிகளுக்கு காசோலைகளும் அத்தியாவசியப் பொருட்களும் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஜனாதிபதியின் அலோசனையின் படியும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்களின் ஏற்பாட்டிலும் வட மாகாண ஆளுநரின் அழைப்பின் பேரிலும் பல்வேறு கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

தொடர்ந்தும் இவ்வாறான செயற்திட்டங்களை வட பகுதியில் நடைமுறைப்படுத்துவதுடன் எதிர்காலத்திலும் சிறப்பான அபிவிருத்திச் செயற்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம என்றும் இவ்வாறான மனைப்பொருளாதார மற்றும் வாழ்வாதார எழுச்சித்திட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்தி வளமான சமூகத்தை உருவாக்கவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச ஆகியோர் உரை யாற்றியதைத் தொடர்ந்து பயனாளிகளுக்கான காசோலைகளும் அத்தியாவசியப் பொருட்களும் வழங்கப்பட்டன.

இந்த நுண்கடன் திட்டத்தினூடாக 852 பயனாளிகளுக்கு 30 ஆயிரம் ரூபா தொடக்கம் 50 ஆயிரம் ரூபா வரையான காசோலைகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## போலி நாணயத்தாள் தாராளம்; தடுத்து நிறுத்த விழிப்புணர்வு

(யாழ்ப்பாணம்)

போலி நாணயத்தாள்களின் புழக்கம் வடபகுதியில் அதிகரித்து வருகின்றது. போலி நாணயத்தாள்களை மக்கள் கண்டுபிடிக்கக் கூடிய வகையில் தாள்கள் வெளியிடப்பட்டுள்ளன. நாணயத்தாள்களைத் தொட்டுப் பார்ப்பதன் மூலம் போலி நாணயத்தாள்களை இனங்காண முடியும்.

இவ்வாறு நாணய வெளியீட்டுத் திணைக்கள அத்தியட்சகர் சி.பி.ஏ. கருணாதிலக்க தெரிவித்துள்ளார். போலி நாணயத்தாள்களைக் கண்டறிவது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை மத்திய (15 ஆம் பக்கம் பார்க்க)

## கொரியாவில் தொழில் வாய்ப்பு வடபகுதி இளைஞர்களுக்கு சந்தர்ப்பம்

(யாழ்ப்பாணம்)

கொரியாவில் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புத் தொடர்பான கருத்தரங்கு நேற்று யாழ்.வைத்தீஸ்வராகக் கல்லூரி மண்டபத்தில் வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தலைமையில் நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணிப்பாளர் சுபத் கமலத் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் டிலான் பெரேரா கூறுகையில்,

கொரிய நாட்டில் வேலை வாய்ப்பு (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியுடன் லியம் பொக்ஸ் பேச்சு



இலங்கைக்கு வருகைதந்துள்ள பிரித்தானிய பாதுகாப்புச் செயலாளர் லியம் பொக்ஸ் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. நேற்று நண்பகல் 12 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ள கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை விரைவாக வெளியிடப்பட வேணடும் என பிரித்தானிய பாதுகாப்பு செயலாளர் லியம் பொக்ஸ் தெரிவிததார். (15 ஆம் பக்கம் பார்க்க)


## மீனவர்கள் விடுதலை

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பத்து இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஏப்ரல் மாதம் இந்திய கடல் எல்லைக்குள் சென்ற குற்றச்சாட்டின் பேரில் அந்த நாட்டு கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த மீனவர்கள் விசாகப்பட்டினம் நீதி மன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக கடற்தொழில் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

இலங்கை மீனவர்களுடன் இந்திய அதிகாரிகளின் பொறுப்பிலிருந்த இரண்டு மீன்பிடிப் படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் லால் டி சில்வா தெரிவித்தார்.

## அச்சுவேலி - பருத்தித்துறை வீதி இன்றுமுதல் மக்கள் பாவனைக்கு



(யாழ்ப்பாணம்)

பாதுகாப்புக் காரணங்களுக்காக இதுவரை காலமும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வந்த அச்சுவேலி - பருத்தித்துறைப் பிரதான வீதி இன்று முதல் மக்கள் பாவனைக்காகத் திறந்துவிடப்படவுள்ளது.

தொண்டைமானாறு ஊடான அச்சுவேலி - பருத்தித்துறை வீதி இன்று திறக்கப்படவுள்ளதாக யாழ் இராணுவக் கட்டளைப் பணியக ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

# சிறுபோக செய்கை அமோகம்



(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப் பெருமான் குளத்தின் கீழ் 140 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது

கடந்த காலபோகத்தில் 623 ஏக்கரில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் தற்போது 140 ஏக்கரில் இச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதேவேளை, கோட்டை கட்டிய குளத்தின் கீழ் 70 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (121)

# பதிவு செய்யக் கோரிக்கை

(தென்மராட்சி)

எழுதுமட்டுவாள் பிரதேசத்தில் மீள் குடியேற்றம் இடம்பெற இருப்பதால், அப்பகுதி மக்கள் தங்கள் விபரங்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு எழுதுமட்டுவாள் தெற்கு கிராம சேவையாளர் கேட்டுள்ளார்.

இப்பதிவுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் எழுதுமட்டுவாள் சந்தியில் உள்ள அலுவலகத்தில் இடம்பெறும்.

பதிவுகளை மேற்கொள்வதற்கு குடும்பத்தில் ஒருவர் தேசிய அடையாள அட்டை மற்றும் காணி உறுதி என்பவற்றுடன் சமுகம் கொடுக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். (11)

# மீன் பிடித் துறைமுகங்களை புனரமைப்புச் செய்யுங்கள்

## நெடுந்தீவு மீனவர்கள் கோரிக்கை

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவுப் பகுதியில் உள்ள அனைத்து மீன்பிடித் துறைமுகங்களையும் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

நெடுந்தீவில் உள்ள பிரதான மீன்பிடித் துறைமுகங்களான தூங்காலை, செபநாயகபுரம், பற்றிமா ஆகிய பகுதிகளில் உள்ள புராதன மீன்பிடித் துறைமுகங்களை புனரமைத்துத் தருமாறு நெடுந்தீவு மீனவர் சங்கங்கள் சமாசம் ஊடாக கோரிக்கை முன்வைத்துள்ளன.

நெடுந்தீவுப் பகுதியில் கடற்தொழிலில் ஈடுபட்டு வரும் 375 மீன்பிடிக் கடற்கலங்களை நிலையாகத் தரித்து விடுவதற்கு பொருத்தமான துறைமுகங்கள் இன்மையாலும் பருவக் காற்றுக் காலங்களில் படகுகளை கரையேற்ற வேண்டிய சூழ்நிலை காணப்படுவதாலும் தாம் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருவதாக அப்பகுதி மீனவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போது முறையிட்டனர்.

மேற்படி கோரிக்கைகள் தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுப்பதோடு, தூங்காலைத் துறைமுக விஸ்தரிப்புப் பணிக்கு ரூபா 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது. (27)

# யானைகளின் தொல்லை



(அக்கராயன்)

துணுக்காய் அம்பலப்பெருமான் குளம் மற்றும் கோட்டைகட்டிய குளம் ஆகிய கிராமங்களில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

மேற்படி கிராமங்களில் இரவு வேளைகளில் வரும் காட்டு யானைகள் பயன்தரும் தென்னங் கன்றுகள், பலா மரக்கன்றுகளை அழித்து நாசமாக்கி வருவதாக கிராம மக்களினால் தெரிவிக்கப்படுகிறது.

காட்டு யானைகள் குடிமனைகளுக்குள் நுழைவதைத் தடுக்கும் வகையில் அதற்கான நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (121)

# பேருந்து சேவையை விஸ்தரிக்க கோரிக்கை



(பூநகரி)

மன்னார்-பூநகரி வீதியூடான சேவையில் ஈடுபடும் அரச தனியார் பேருந்துகள் பள்ளிக்குடா வரை சென்று தமது பிரயாணம் தொடர வேண்டுமென பள்ளிக்குடா பிரதேச பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பூநகரியில் 661ஆவது இராணுவ படையணியின் அதிகாரியின் ஒத்துழைப்புடன் இப்பாதை சீர்செய்யப்பட்டது.

முன்னர் இப்பாதையின் சீர்கேடு காரணமாக போக்குவரத்துச் செய்ய முடியாது இருப்பதாக சுட்டிக் காட்டப்பட்டதை அடுத்து மேற்படி இராணுவ அதிகாரியின் ஒத்துழைப்புடன் இப்பாதை சீரான முறையில் அமைக்கப்பட்டது.

இதன் பின்னர் இதுவரை இப்பாதையூடான சேவை இடம்பெறவில்லை என கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

முன்னர் காலை, மாலை என இரு பேருந்து சேவைகள் மட்டும் இங்கு இடம்பெற்று வந்த நிலையில் தற்போது இப்பிரதேசத்தினூடான சேவையை மீளவும் மேற்கொள்ளுமாறு அப்பிரதேச மக்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

குறிப்பாக இப்பிரதேசத்தில் நோயாளர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் பேருந்து சேவைகள் இல்லாமையால் பல்வேறு சிரமத்தின் மத்தியில் பிரயாணங்களை மேற்கொள்வதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

எனவே போக்குவரத்து தேவையைக் கருத்தில் கொண்டு பேருந்து சேவையை ஏற்படுத்தித் தருமாறு கோரப்பட்டுள்ளது. (112)


# நினைவு தினம் அனுஷ்டிப்பு

(யாழ்.நிருபர்)

நவாலி சென்.பீற்றேஸ் தேவாலயம் மீதான விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலில் பலியான 147 பொதுமக்களின் 17ஆவது நினைவு தினம் நேற்று சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

1995ஆம் ஆண்டு ஜீலை 9 ஆம் திகதி நவாலி சென்.பீற்றேஸ் தேவாலயம் மீதான விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலில் 147 பேர் உயிரிழந்தும், 313 பேர் படுகாயமடைந்து அங்கவீனர்களானமையும் குறிப்பிடத்தக்கது. (10)

# சுன்னாகத்தில் பள்ளிவாசல் கோரிக்கை வலுக்கிறது



(சுன்னாகம்)

சுன்னாகம் நகரில் பள்ளிவாசல் ஒன்றை நிர்மாணித்துத் தருமாறு அங்குள்ள முஸ்லிம்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் சமாதானம் மலர்ந்துள்ள நிலையில் தற்போது சுன்னாகம் நகரில் அதிகளவான முஸ்லிம்கள் இலங்கையின் எல்லாப் பாகங்களில் இருந்தும் வருகை தந்து இப்பிரதேசத்தில் தங்கியிருந்து வியாபாரங்களில் ஈடுபடுவதுடன், யாழ்.பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைக் கழகம் மற்றும் சுன்னாகம் ஆயுள்வேத கல்லூரியிலும் அதிகளவான முஸ்லிம் மாணவர்கள் தமது உயர்கல்வியை இப்பிரதேசங்களில் தங்கியிருந்து தொடர்ந்து வருகின்றனர்.

எனினும், இவர்கள் தங்களது தொழுகை நேரத்துக்கு 8² கிலோ மீற்றர் தொலைவில் உள்ள யாழ். நகரப் பள்ளிவாசல்களையே நாடவேண்டியுள்ளது இதனால், இவர்கள் பல்வேறு இன்னல்களை அனுபவிப்பதாகக் குறை கூறுகின்றனர்.

எனவே, பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனமெடுத்து ஒரு பள்ளிவாசலை தற்காலிகமாக நிர்மாணித்து, எதிர்வரும் மாதம் நோன்பு ஆரம்பிக்க இருப்பதால் துரித கதியில் இதனைச் செய்து தரு மாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# கடந்த காலங்களை மறந்துவிட்டு தாய்நாட்டுக்காக சேவையாற்றுங்கள்

## ஜனாதிபதியின் ஆலோசகர் ரஜீவ விஜேசிங்க



(கொழும்பு)

கடந்த காலங்களை மட்டும் சிந்தித்துக்கொண்டு பதற்றத்தை ஏற்படுத்துவதைத் தவிர்த்து, நாடு திரும்பி மக்களுக்கும், நாட்டுக்கும் என்ன செய்யலாம் என்பது குறித்துச் சிந்திக்கவேண்டும் என்று வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களிடம் ஜனாதிபதியின் ஆலோசகர் ரஜீவ விஜேசிங்க கோரிக்கை விடுத்துள்ளார். இப்போது இலங்கையில் பயங்கரவாதமும், வன்முறையும் ஒழிக்கப்பட்டுவிட்டது. இனி, வீண் சந்தேகங்களை இல்லாதொழிக்க வேண்டியிருக்கிறது. என்று, பிறசெல்ஸ் நகரில் ஆசியக் கற்கைகளுக்கான ஐரோப்பிய கற்கை நிறுவனத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் இருக்கும் பழைய விடயங்களை மட்டுமே ஞாபகத்தில் வைத்திருப்போர், மீண்டும் பதற்றத்தை ஏற்படுத்த முயலாமல், நாட்டுக்கு வந்து மக்களுக்கும், நாட்டுக்கும் என்ன செய்ய முடியும் என்பது பற்றிச் சிந்திக்கவேண்டும் என்றார்.

இவர்களது சந்தேகங்களைப் போக்குவது சிரமமானது என்பதை நான் புரிந்துகொள்கிறேன். இதை மீளுறுதிப்படுத்தி, முன்னோக்கிச் செல்லத் தயாராக இருப்பவர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு அரசாங்கத்தில் இருக்கும் நாம் உறுதியான பணிகளைச் செய்யவேண்டியிருக்கிறது என்றும் தெரிவித்தார்.

தருஸ்மன் அறிக்கையையும், சனல்- 04 வீடியோவையும் அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகளைக் குழப்ப முயல்பவர்களைக் கண்டித்த அவர், உணர்ச்சிகரமான அறிக்கைகளால் தவறாக வழிநடத்தப்படாமல் இருக்குமாறு மக்களைக் கேட்டுக்கொண்டார்.

உணர்ச்சிகரமான அறிக்கையிடல்களால் தவறாக வழிநடத்தப்படாதீர்கள். மிகச்சரியான உண்மைகளுக்கும், கட்டுக் கதைகளுக்கும் இடையிலான வேறுபாட்டைப் புரிந்துகொள்ள முயற்சிக்கவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு இலங்கையின் சமகால நிலைமைகள் தொடர்பாக அறிந்து கொள்வதற்கு, பிறசல்ஸில் தலைமையகத்தைக் கொண்டுள்ள சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு (Human Rights Watch) மற்றும் சர்வதேச நெருக்கடிக் குழு (International Crisis Group) உள்ளிட்ட சர்வதேச தொண்டர் அமைப்புக்கள் முன்வராமை வேதனைக்குரிய விடயம் என்று, ஐரோப்பிய ஒன்றியம், லக்ஸ்சம்பேர்க் மற்றும் பெல்ஜியம் ஆகியவற்றுக்கான இலங்கைத் தூதுவர் ரவிநாத ஆரியசிங்க இங்கு உரையாற்றும்போது தெரிவித்தார்.

# பேராசிரியர் அமரர் சிவத்தம்பிக்கு தமிழ் ஊடகவியலாளர்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் மறைந்தாலும் அவர் உருவாக்கிய பல புதிய தமிழ் சொற்கள் அவருடைய படைப்புக்கள் எம் மத்தியில் என்றென்றும் நிலைத்திருக்கும் என இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் ஊடகத்துறையினருடன் அவருக்கு இருந்த நெருக்கம் வெறுமனே நட்பு மாத்திரம் அல்ல, தமிழ் ஊடகத்துறையின் மொழி நடைமுறைகள் வாக்கிய அமைப்புகள் போன்றவற்றில் திருத்தங்களை, புதிய சொற்பரிமாணங்களை சொல்லிக் கொடுக்கும் ஆசான் என்ற அந்தஸ்த்தில் அந்த உறவு விளங்கியது.

வேகமாக மாற்றமடைந்து வரும் நவீன உலகின் போக்குக்கு ஏற்ப தமிழ் ஊடகத்துறையின் வளர்ச்சிக்கு பேராசிரியர் சிவதம்பியின் மொழி ஆளுமை பேருதவியாக இருந்த ஒரு காலகட்டத்தில் அவருடைய மறைவை தமிழ் ஊடகத்துறையினரால் ஏற்க முடியாமல் உள்ளது என அந்த அனுதாபச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்படடுள்ளது.

உடல் மற்றும் மனதில் உள்ள குறைகளை நினைத்துத் துயரப்படுவதனால் நமக்குப் பயன் எதுவும் கிடையாது. அவற்றை ஒரு பொருட்டாக எண்ணாமல் ஊக்கத்தோடு இருப்பதே நன்மை தரும்.

- விவேகானந்தா.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## வெடித்தபடியிருக்கும் போராட்டம்!

இத்தனைக்குப் பிறகும் இன்னும் தங்கள் கோமாளித்தனங்களை நிறுத்தாத தலைவர்களைக் கொண்டிருக்கும் தமிழினத்தை நினைத்தால் வியப்பாகத்தானிருக்கிறது. குச்சியால் அழுத்தியவுடன் தலையைத் தூக்கும் புழுவைப் போல, தேர்தல் அறிவித்த உடன் தலைவர்களிடம் குபீரெனப் பொங்கிப் பிரவகிக்கும் வீர வசனங்களைக் கேட்கக் கேட்கப் புல்லரிப்புத் தாளவில்லை.

கெட்டு நொந்து களைத்து, இனிப் போதும், வசதியாய் எங்காவது குந்தி வாழ என்ன வழி என்று அலமலந்து நிற்கும் சனங்களிடம், 'பொறுத்தது போதும் இனிப் பொங்கியெழுவோம்... போராட்டம் வெடிக்கும்' என்று தேர்தலைக் கண்ட விறுவிறுப்பில் ஆளுக்காள் கூவுவதைக் கேட்டால், 'நானும் சண்டியன் நானும் சண்டியன்' என்று வடிவேல் கூவுவது மாதிரியே கேட்கிறது. இப்பவும் கூட வீர வசனங்களைப் பேசிக் கொண்டிருக்கக் கூசாத தலைவர்களைப் பார்த்தால் நாம் எந்த நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற திகைப்பு ஏற்படுகிறது.

வடக்கு, கிழக்கில் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் அரசு நிறுத்தாவிட்டால், போராட்டம் வெடிக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றத்தில் எச்சரித்துள்ளார்.

இதுமட்டுமில்லாமல் வேறு பல எச்சரிக்கைகளையும் அவர் விடுத்துள்ளார். முரண்பாட்டுக்குக் காரணமான அடிப்படை விடயங்களைத் தீர்ப்பதற்கான ஏற்றுக்கொள்ளக் கூடியதொரு அரசியல் தீர்வொன்றை துரிதமாகக் காண வேண்டும்.

இடம்பெயர்ந்த மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் தமது அன்றாட வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்பவும் மீள ஆரம்பிக்கவும் உதவும் பொருட்டு வடிவமைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல் ஒன்றைத் துரித கதியில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

தமிழ்மக்கள் மீது பாதகமான அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாசார தாக்கங்களை ஏற்படுத்துகின்ற பல்வேறு நடவடிக்கைகளை மாற்றியமைப்பதற்கும் சீர்செய்யவும் மற்றும் நிவர்த்தி செய்யவும் அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றெல்லாம் ஒருவிரலை உயர்த்தி நெருப்பு விழிகளால் அரசை எச்சரித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்.

ஆயுதங்களால் அரசை நடுநடுங்க வைத்துக் கொண்டிருந்தவர்களைத்தான் விரல்சொடுக்கில் மாளக் கொடுத்துவிட்டோம்; இதோ! விரலை நீட்டி வீர வாய்முழக்கத்தாலேயே அரசை நடுங்க வைத்துக் கொண்டிருக்கும் தலைவர்கள் இன்னும் நமக்கிருக்கிறார்கள் என்ற புளகத்தில் செய்தி வந்த பத்திரிகைகளைக் கையில் பிடித்தபடியே கிறுகிறுத்துப் போயிருப்பார்கள் தமிழர்கள். குறைந்தபட்சம் இந்த விரல் நீட்டி விழியுருட்டி மிரட்டலாவது செய்து எதிரிகளைக் கைகால் நடுங்க வைக்கவில்லையென்றால் தமிழர்களா கொக்கா?

இப்படியே இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் பொங்கியெழுவோம், போராட்டம் வெடிக்கும், சிங்கள அரசுக்குப் பாடம் படிப்பிப்போம் என்ற முழக்கங்களிலேயே மூளையைக் கைவிட்டு ஏமாந்துகொண்டிருப்போம்? என்ன போராட்டத்தை இவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்? அளவெட்டியில் அனுமதி பெறாமலே கூட்டம் நடத்தும் ஜனநாயக உரிமைக்காகப் போராடிக் காயமடைந்து, பஜிரோ வாகனங்களையும் இராணுவ நொருக்குதலில் இழந்து கால்நடையாகவே நீதி கேட்டு ஊர்வலம் சென்றது போல தொடர்ந்தும் போராடப் போகிறார்களா?

தேர்தல் முடியும் வரை இவ்வாறான சிறு சிறு சீண்டல்களை உருவாக்கிப் பொங்கி வெடிப்பது சரி; தேர்தல் முடிந்த பிறகு அடுத்த தேர்தல் வரை ஏன் எல்லா வெடிகளும் நமநமத்துப் போய்விடுகிறது?

மக்களைத் திரட்டிப் போராட்டத்தை வெடிக்க வைப்பதற்கு இனியும் ஏன் காத்திருக்க வேண்டும்? பேச்சுத்தான் ஒரு போதுமே சரிவராது என்பதும் குழப்புவதற்கு என்ன பேச வேண்டும் என்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கிறதே. இன்னும் போராட்டம் ஏன் வாயிலேயே வெடித்துக் கொண்டிருக்கிறது?

தேர்தலுக்காக விடும் வீர வசனங்களை இன்னும் எத்தனை எத்தனை தேர்தலுக்குத்தான் இப்படியே அள்ளிவிட்டுக் கொண்டிருக்கப் போகிறீர்கள்? தீர்வைக் கொண்டுவருவதற்கு எந்தவொரு வழியும் இல்லை உங்களிடம். அதனால்தான் மக்களை உணர்ச்சிவசப்படுத்தி திசைதிருப்பிக் கொண்டிருக்கிறீர்கள், இல்லையா?

- ஆசிரியர்

# இரணைமடு நீர்ப்பாசனத்திட்டம் மூலம் 10 ஆயிரம் ஏக்கரில் சிறு போகச் செய்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் மூலம் 10 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் எஸ். சுதாகரன் தெரிவித்துள்ளார்.

வழமையாகக் கூடுதலான நெற்செய்கை மேற்கொள்ளப்படும் நிலையில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள குளங்கள் பல புனரமைக்கப்படாமையாலேயே இவ்வாண்டுக்கான சிறுபோக நெற்செய்கை குறைந்தளவிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனடிப்படையில் கல்மடு குளத்தின் கீழ் 350 ஏக்கரிலும், வன்னேரிக்குளத்தின் கீழ் 125 ஏக்கரிலும் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (121)

## கண்டாவளைப் பிரதேசத்துக்கான போக்குவரத்துச் சேவைகள் இல்லை

(முரசுமோட்டை)

கிளிநொச்சி-கண்டாவளைப் பிரதேசத்திற்க்கான போக்குவரத்துச் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளமையால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பரந்தன்-முல்லை வீதியிருந்து சுமார் 6 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் இந்தக் கிராமத்தில் 300 வரையான குடும்பங்கள் மீளக்குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் இப்பகுதிக்கான மருத்துவ தேவை, பொதுச்சந்தை மற்றும் இதர தேவைகள் எவையும் பூர்த்தி செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

இதனால் இப்பகுதி மக்கள் இத்தேவைகளுக்காக வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலையில் இப்பகுதிக்கான போக்குவரத்து வசதிகள் எவையும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என அப்பிரசேத மக்கள் தெரிவிக்கின்றனர். (110)

## சந்தை ஆரம்பிக்கப்படவில்லை முரசுமோட்டை மக்கள் கவலை

(முரசுமோட்டை)

கிளிநொச்சி-முரசுமோட்டை பொதுச்சந்தை ஆரம்பிக்கப்படாமையால் அன்றாட தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கண்டாவளைப் பிரதேச சபைக்குட்பட்ட மேற்படி சந்தைக் கட்டடத்தொகுதி யுத்த நடவடிக்கைகளினால் சேதமாக்கப்பட்ட நிலையில் மீளவும் புனரமைக்கப்பட்டு இயங்குவதற்கான நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு, சந்தை அமைக்கப்படாமையால் இப்பிரதேசத்தைச் சேர்ந்த 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது தேவைகளுக்காக பரந்தன், கிளிநொச்சி சந்தைகளுக்கே செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுதது சந்தையை மீளஆரம்பிப்பதற்கான வேலைகளை மேற்கொள்ளுமாறு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (110)

## அக்கராயன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வருவோர் அதிகரிப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி - அக்கராயன் பிரதேச மருத்துவமனையில் தற்போது நோயாளர்களின் தொகை அதிகரித்துக் காணப்படுவதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த ஒருமாத காலமாக மருத்துவர் பணியில் இல்லாமையால் நோயாளர்கள் கிளிநொச்சி பொது மருத்துவமனைக்குச் சென்றே சிகிச்சை பெற்று வந்தனர்.

இதனையடுத்து கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் மற்றும் மேற்படி பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் ஆகியோர் எடுத்த நடவடிக்கை காரணமாக இரு மருத்துவர்கள் கடந்த முதலாம் திகதி முதல் பணிக்கு நியமிக்கப்பட்ட நிலையில் தற்போது இவ்வைத்தியசாலைக்கு நாளாந்தம் அதிக நோயாளர் சிகிச்சை பெறச் செல்கின்றனர்.

குறிப்பாக தற்போது வெப்பகால நிலை நிலவுவதால் பனிக்காய்ச்சல், சாதாரண காய்ச்சல், வாந்திபேதி போன்ற நோய்களுக்கே அதிக சிகிச்சைகளை நோயாளர்கள் பெற்று வருவதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (121)

## சிறைச்சாலைக்குள் முறைகேடுகள்; விசாரணை நடத்த அமைச்சர் பணிப்பு

(கொழும்பு)

சிறைச்சாலைகளுக்குள் இடம்பெறுவதாகக் கூறப்படும் பல்வேறு முறைகேடுகள் தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்துமாறு புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரால் அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணை தொடர்பிலான அறிக் கையை தம்மிடம் கையளிக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக அமைச்சர் தெரிவிக்கின்றார்

சிறைச்சாலைகளில் நிலவும் இடப்பற்றாக் குறையை நீக்குவது உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக தாம் வழங்கிய ஆலோசனையை மீறும் வகையில் செயற்படும் அதிகாரிகளுக்கு எதிராகக் கடும் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை சிறைக் கைதிகளின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் தலைமையிலான மூவர் அடங்கிய குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

# சனத்தொகையில் எட்டு வீதமானோர் அங்கவீனமுடையவர்கள் எனத்தகவல்

(கொழும்பு)

நாட்டின் சனத்தொகையில் சுமார் எட்டு வீதமானோர் அங்கவீனமுடையவர்கள் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவிக்கின்றார்.

கொள்ளுப்பிட்டியில் உள்ள ஜப்பான் - இலங்கை கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வலுவிழந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் பாடசாலையில், கல்வி பயின்ற மாணவர்களுக்கான டிப்ளோமா பட்டமளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொழில் என எண்ணாமல் மனிதர்களுக்காக மனிதரை நேசிக்கின்ற மனிதர்களின் ஒரு முயற்சியாகவே இதனை தாம் எண்ணுவதாக அமைச்சர் குறிப்பிட்டார். பல்வேறு காரணங்களால் நாட்டின் சனத்தொகையில் ஏழு அல்லது எட்டு வீதமானோர் அங்கவீனர்களாக இருக்கின்றமை பதிவாகியுள்ளது. கடந்த காலங்களில் நிலவிய யுத்த சூழல், அதற்கு முன்னரும் இன்றைய காலப்பகுதியிலும் காணப்படும் உயிரியல் விஞ்ஞான காரணங்கள், இயற்கைக காரணங்கள் அத்துடன் பல்வேறு சமூக பிரச்சினைகள் என்பனவே இந்த நிலைமைக்கான காரணங்களாக உள்ளன எனவும் தெரிவித்தார்.

# குறைந்தளவான வாழ்க்கைச் செலவு; 114 ஆவது இடத்திலுள்ளது இலங்கை

(கொழும்பு)

உலகின் குறைந்த அளவிலான வாழ்க்கை செலவீனங்களைக் கொண்டுள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த தகவலை எக்கனொமிக்ஸ் சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

93 நாடுகளில் உள்ள 140 நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட, கருத்துக் கணிப்பின் அடிப்படையிலேயே இந்தத் தகவல் தெரியவந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது இலங்கை 114 ஆவது நாடாக தரப்படுத்தப்பட்டுள்ளது.

விசேடமாக கொழும்பு நகரம் குறைந்த செலவில் வாழ்வாதாரதை முன்னெடுக்க கூடிய நகரம் எனவும் அந்தச் சஞ்சிகை வெளியிட்டுள்ள கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற இளைஞர்களுக்கான கொரிய நாட்டு வேலை வாய்ப்பு தொடர்பான கருத்தரங்கில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அலுவல்கள் மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணிப்பாளர் சுபத் கம்லத் நிற்பதையும், இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (படம் : சுமித்ரி)

## பாடசாலைகள் திறப்பு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலை என்பன நாளை திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இப்பாடசாலைகளை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா திறந்து வைக்கவுள்ளார். இப்பாடசாலைகள் ஏற்கனவே இயங்கிய இடத்திலேயே மீண்டும் இயங்கவுள்ளன. இப்பாடசாலைக்குரிய அடிப்படைத் தேவைகளை யுனிசெவ் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. (109)

# யாழில் சமுர்த்தித் திட்டம் துரிதமாக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தித் திட்டப் பணிகளை துரிதமாக முன்னெடுக்கும் விதமாகவும், அதற்கான ஏற்பாடுகளைத் துரிதமாக மேற்கொள்வதற்காகவும் சமுர்த்தி அதிகாரசபை பணிப்பாளர் நாயகம் திலகசிறி உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் யாழ்.மாவட்டத்திற்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்தடைந்த பணிப்பாளர், மாவட்டத்தில் உள்ள சில சமுர்த்தி வங்கிகளுக்கு விஜயம் மேற்கொண்டதுடன், வங்கிகளால் செயற்படுத்தப்பட்டு வரும் வாழ்வாதார செயற்திட்டங்கள் மற்றும் திரியபியச வீட்டுத்திட்டங்களையும் பார்வையிட்டார். அத்துடன், வங்கிகளால் கிராம அலுவலர் பிரிவுகளில் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும், வங்கி முகாமையாளர்கள் மற்றும் அலுவலர்களுடன் ஆராய்ந்துள்ளார்.

இதேவேளை, நேற்று யாழ். மாவட்டத்திற்கு விஜயம் செய்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ யாழ்.செயலகத்தில் வங்கிகளின் முகாமையாளர்களுடனும், அதிகாரிகளுடனும் யாழ்.மாவட்டத்தில் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்ததுடன், சமுர்த்தி வங்கிச் சங்கங்களில் எதிர்வரும் நாட்களில் வழங்கப்படவுள்ள வாழ்வாதாரக் கடன்கள் மற்றும் சுயதொழில் உபகரணங்களை வறிய மக்களுக்கு வழங்கிப் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

அத்துடன், கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் திவிநெகும செயற்திட்டமும் அமைச்சரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (26)

# தன்னை மீளாய்வு செய்யும் உத்தியே நல்ல பாடமாக அமையக்கூடியது

## விரிவுரையாளர் ச. லலீசன்

(யாழ். நிருபர்)

"ஒருவன் தன்னைத் தான் ஆய்வு செய்ய வேண்டும் என்ற உணர்வை மாணிக்கவாசகரது திருவாசகப் பாடல்கள் நமக்கு ஊட்டுகின்றன. உலகிலுள்ள மனிதர்களோ பிறரைப் பற்றி ஆய்வு செய்வதிலும் பிறருடைய குறைகளைக் காண்பதிலுமே காலத்தைக் கழிக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் மாணிக்கவாசகர் போதித்த தன்னை மீளாய்வு செய்யும் உத்தி நல்ல பாடமாக அமையக்கூடியது" எனக் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளர் ச. லலீசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இந்து சமய அபிவிருத்திக் கழகம் நடத்திய மாணிக்கவாசகர் குருபூசை விழா மாணவன் வி. யசிகரன் தலைமையில் நடைபெற்றபோது, முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில், திருவாசகம், திருக்கோவையார் ஆகிய அரிய நூல்களை மாணிக்கவாசகர் சைவ உலகுக்காக நல்கினார். இவை ஞானப்பனுவல்கள் ஆகும். வாழும் வழி தெரியாமையினாலேயே நம் சமூகம் துன்பத்திற்கு உள்ளாகியிருக்கிறது. திருவாசகப் பாடல்கள் அடிகளாருடைய அனுபவச் சாறாகவே அமைந்திருக்கின்றன. இறைவனைப் பற்றிப் பிடிப்பதற்கு உகந்த மார்க்கம் பக்தியே ஆகும். இன்று எல்லோரும் இணைய வலையில் தேடுதல் செய்து உலகைப் பிடித்துக் கொள்கிறோம். அது போல் இறைவனைப் பிடிப்பதற்கு ஒரு வலைப்பின்னல் இருக்கிறது. அதுதான் பக்தி வலை என்றும் மாணிக்கவாசகர் கூறியுள்ளார் என்றார். (10)

## பாராட்டு நிகழ்வு

(திருநெல்வேலி)

அராலி தெற்கு மாவத்தை அருள் மிகு பெரியதம்பிரான் ஆலயத்தில் இன்று பொங்கல் விழா நடைபெறுகின்றது.

இவ்விழாவில் பூசை நிகழ்வுகளை கடந்த பதினைந்து ஆண்டுகளாக நிறைவேற்றி வரும் ஆலய பூசகர் வைத்தி அப்புத்துரை கௌரவிக்கப்படவுள்ளார். இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளும் மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன் அவருக்கு பட்டம் வழங்கிக் கௌரவிப்பார். (60)

## செயலமர்வு

(வடமராட்சி)

தொகை மதிப்புப் படிவங்களைப் பூர்த்தி செய்வதற்கு அதிபர்களுக்கான செயலமர்வு கோட்ட ரீதியாக நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு மருதங்கேணிக் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கு யாழ். புலோலி மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்திலும், 18ஆம் திகதி திங்கட்கிழமை 8.30 மணிக்கு பருத்தித்துறைக் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கு புலோலி மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்திலும், 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கரவெட்டிக் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கு புலோலி மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்திலும் நடைபெறவுள்ளது. (109)

# யாழ். கடலோட்டு இயந்திரவியல் கல்லூரிக்கு மட்டக்களப்பு, திருமலையிலிருந்து பணியாட்கள்

(குருநகர்)

யாழ். கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரிக்குப் பணியாட்கள் கோரி உதவிப் பணிப்பாளரால் கொழும்பு தலைமைக் காரியாலயத்துக்கு விடுக்கப்பட்ட அழைப்பிற்கு மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை பகுதிகளில் இருந்து பணியாட்களை இடமாற்றம் செய்துள்ளதாக அறிய வருகிறது.

யாழ். இரண்டாம் குறுக்கு வீதியில் ஜப்பான் ஜெய்க்கா நிறுவனத்தால் 25 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் புதிய இருமாடிக் கட்டடங்கள் நிறுவப்பட்டு வருகிறது.

துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் கட்டட வேலைகள் இன்னும் மூன்று மாதங்களில் முடிவாகி செப்ரெம்பர் மாத இறுதியில் கல்லூரி திறந்து வைக்கப்படவிருக்கும் நிலையில், குறிப்பிட்ட கல்லூரியின் பணியாட்கள் தேவைகள் நிரப்பப்பட வேண்டியுள்ளது.

இந்நிலையில் உதவிப் பணிப்பாளரால் லிகிதர் - 1, கணக்காளார் - 1, சிற்றூழியர்கள் - 2, பகலிரவு காவலாளிகள் -2, மாலுமிகள் 2, படகோட்டி - 1, போதனாசிரியர்கள் - 2, களஞ்சியப் பொறுப்பாளர் 1 ஆக 12 ஊழியர்களைக் கோரியிருந்தார்.

1982ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு 2005 ஆம் ஆண்டு வரையான காலங்களில் யாழ்ப்பாணத்தில் மேற்படி கல்லூரியின் செயற்பாடுகள் அனர்த்த நிலைமைகளால் ஸ்தம்பிதம் அடைந்திருந்தது. 2005 ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு தனியார் வீடொன்றில் குறைந்த அளவான ஊழியர்களுடன் கல்லூரியின் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. கடந்த 29 வருடங்களுக்கு மேலாக யாழ். கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரிக்கு நிரந்தர நியமனங்கள் எதுவும் செய்யப்படவில்லை.

ஆயினும் 12 ஊழியர்களைக் கேட்டுள்ள நிலையில் மட்டக்களப்பு, திருகோணமலைக் கல்லூரிகளில் பணியாற்றும் ஒரு சிலரை அனுப்பிவிட்டு யாழ்ப்பாணப் பகுதி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்க கொழும்பு தலைமைக் காரியாலயம் பின்னடித்து வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (68)

## கலாசார மண்டபம் திறப்பு

(வவுனியா)

வவுனியா - வைரவபுளியங்குளம் ஆதி விநாயகர் ஆலயத்தில் அமரர் பாலாம்பிகை தேவராசா நினைவாக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கலாசார மண்டபத்தை இன்று ஞாயிற்றுக்கிழமை வவுனியா மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி ஜே. விஸ்வநாதன் வைபவ ரீதியாக திறந்துவைப்பார். இந்த மண்டபத்தினை தேவ ராசா குடும்பத்தினர் பாலாம் பிகை நினைவாக சுமார் 12 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணித்துள்ளனர். இந்த வைபவத்தில் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் பி. சிவகுமாரன் மண்டப நினைவுக் கல்லை திரை நீக்கம் செய்து வைப்பார். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளது. (39)

# மனித உரிமை மகளிர் அமைப்பு உறுப்புரிமை விண்ணப்பம் கோரல்

(அச்சுவேலி)

சமாதான நீதிவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் மகளிர் அமைப்பினை ஸ்தாபிப்பதற்காக நாடு முழுவதாக உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ் அமைப்பில் இணைய விரும்பும் பெண்கள் 23 வயதைத் தாண்டியவராக இருப்பதுடன், முதல் வருடத்திற்கான விண்ணப்பக் கட்டணமாக (அடையாள அட்டை கட்டணம் உட்பட) 1350 ரூபாவினை அங்கத்துவக் கட்டணமாக செலுத்த வேண்டியிருப்பதுடன், அதன் பின்னர் வருடத்திற்கான சந்தாப் பணமாக வருடாவருடம் 1000 ரூபாவினையும் செலுத்தி தமது அங்கத்துவத்தினைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும்.

மேலும் இவ் அமைப்பின் உறுப்புரிமையாளர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு கணினிக் கல்விக்காக சலுகை ரீதியில் கணினிகள் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (03)

# இளைஞர்களின் ஆன்மீகச் சிந்தனை சர்வமத கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

"இளைஞர்களின் ஆன்மீக சிந்தனை" என்ற தொனிப்பொருளிலான சர்வமத கருத்தரங்கொன்று யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு இடம்பெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட உதவி இயக்குநர் த.ஈஸ்வரராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசாவும், சிறப்பு விருந்தினர்களாகத் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாணப் பணிப்பாளர் விமலேஸ்வரி சிறீகாந்தரூபன், நல்லூர்ப் பிரதேச செயலர் செந்தில்நந்தனன், மாநகர சபை உறுப்பினர் மங்களநேசன், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட அலுவலர் கபில குணசேகர மற்றும் மதத்தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இளைஞர் சேவை அதிகாரி வினோதினியின் வரவேற்புரையை அடுத்து ஆசியுரையை வண பிதா ரவிச்சந்திரன் அடிகளார் வழங்கினார்.

வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து உரைகளை விருந்தினர்கள் ஆற்றினர்.

இதில் பெருமளவான இளைஞர் யுவதிகள் மற்றும் சமய ஆர்வலர்கள் கலந்து கொண்டு கருத்துக்களை ஆர்வத்துடன் கேட்டனர். (எஸ்)

# தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் இவ்வாண்டுக்குள் விடுதலையாவார்கள்

## கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ



(அக்கராயன்)

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் இவ்வாண்டுக்குள் விடுதலை செய்யப்படுவார்கள் என ஜனாதிபதியின் புதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கிளிநொச்சி - ஆனைவிழுந்தான் குளத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல் பிரசார நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

அரசாங்கம் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகிறது. எத்தகைய இடையூறுகளும், நெருக்கடிகளும் வந்தாலும் மக்களின் ஆதரவுடன் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்வோம்.

மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் மத்தியில் வாழ்வாதார உதவிகளை அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகவுள்ளது.

அரசின் திட்டங்களுக்கு மக்களின் ஆதரவு தேவையாகவுள்ளது. இப்பகுதி மக்களும் தமது ஆதரவினை நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் வெளிப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

அரசின் திட்டங்களுக்கு மக்களின் ஆதரவு தேவையாகவுள்ளது. இப்பகுதி மக்களும் தமது ஆதரவினை நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் வெளிப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நாமல் ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளில் 30 பயனாளிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களையும், 20 பேருக்கு தையல் இயந்திரங்களையும், 20 பேருக்கு வாழ்வாதார உதவியாக 25 ஆயிரம் ரூபா நிதியையும் வழங்கினார். இந்நிகழ்வில் வேட்பாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (121)

## 108 சங்காபிஷேகம்

(முரசுமோட்டை)

பூநகரி, கட்டுக்கரை, ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயத்தின் 108 சங்காபிஷேகம் கடந்த 7 ஆம் திகதி காலை விசேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி சிறப்புற நடைபெற்றுள்ளது.

மளக்குடியேற்றம் நடைபெற்ற பின்னர் மிகவும் சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்வில் பூநகரிப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களும், பிற இடங்களைச் சேர்ந்த மக்களும் கலந்துகொண்டனர். (110)

## சீரான போக்குவரத்துச் சேவையின்றி பாடசாலை மாணவர்கள் சிரமம்

(இயக்கச்சி)

பச்சிலைப்பள்ளிப் பிரதேச கிராமங்களில் உள்ள மாணவர்கள் காலை, மாலை வேளைகளில் பாடசாலைக்குச் சென்று திரும்பி வருவதில் பல்வேறு பிரயாணக் கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

கோவில் வயல், சங்கத்தார் வயல், கிராம மாணவர்கள் சுமார் நாலு கிலோ மீற்றர் தூரம் கால் நடையாகச் சென்றே இயக்கச்சி சந்தியில் இருந்தே பேருந்துகளில் ஏறி பாடசாலைகளுக்குச் செல்கின்றனர்.

அதேபோல் பளை மத்திய கல்லூரிக்கு கல்வி பயிலச் செல்லும் சேரன்பற்று, மாசார், முகாவில் பாடசாலை மாணவர்கள் புதுக்காட்டுச் சந்தி வரை சென்றே பேருந்துகளில் ஏறிப் பாடசாலை செல்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

பாடசாலை சேவையோ, குறுகிய தூர பேருந்து சேவையோ இப்பகுதியில் நடைபெறுவதில்லை. நீண்டதூர சேவையில் ஈடுபடும் பேருந்துகள் கூடியளவு பிரயாணிகளுடன் யாழ்ப்பாணம் நோக்கிச் செல்வதால், பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்வதில்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (70)

## யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு கமநெகும திட்டத்தின் கீழ் மலசலகூடம்

(இணுவில்)

மகிந்த சிந்தனையின் கமநெகும திட்டத்தின் கிழ் மலசலகூட வசதிகளற்ற யாழ். மாவட்டப் பாடசாலைகளில் அவ் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளில் வடமாகாணக் கல்வி அமைச்சு ஈடுபட்டுள்ளது.

இதன்முதற் கட்டமாக வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக மலசலகூட வசதிகளற்ற பாடசாலைகளின் விபரம் கோரப்பட்டுள்ளன.

இத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள மலசலகூடங்களுக்கு பாடசாலை ரீதியில் இருந்து 20 வீதமும், அரச நிதிகளிலிருந்து 80 வீதமும் செலவிடப்படவுள்ளது. (06)

## போக்குவரத்துக்கு இடையூறு தரும் கட்டாக்காலிகளின் நடமாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றன.

இந்தக் கால்நடைகள் போக்குவரத்து நெரிசல் மிக்க பகுதிகளில் நடமாடுவதால், போக்குவரத்திற்குச் சிரமம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி, காங்கேசன் துறை வீதி மற்றும் முற்ற வெளிப் பகுதிகளில் கட்டாக்காலி கால்நடைகள் அதிகளவில் நடமாடுவதைக் காணமுடிந்தது.

அதிகளவிலான கால்நடைகளை மக்கள் மேச்சலுக்காக அவிட்டு விடுவதால் தான் அவை நகரில் உல்லாசமாக நடமாடித் திரிவதாகவும், இதனால் போக்குவரத்துக்குச் சிரமம் ஏற்படுவதோடு விபத்துக்களும் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வி)

## காலம் கடந்த பிறப்பு, இறப்பு விவாகப் பதிவுகள் ஆரம்பம்

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்த கிராமங்களில் காலம் கடந்த பிறப்பு, இறப்பு விவாகப் பதிவுகள் பதிவு செய்யும் வேலைகள் ஆரம்பித்து நடைபெற்று வருகின்றன.

கடந்த காலங்களில் ஏற்பட்ட போர் நடவடிக்கைகள், இடப்பெயர்வுகள் போன்ற காரணங்களினால் இப்பிரதேச மக்கள் தமது பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகளை உரிய முறையில் பதிவு செய்வதற்குரிய வசதிகள் இருக்கவில்லை.

இந்நிலையில், பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்த்தல், மரண நன்கொடை உதவி பெறல் ஆகிய தேவைகளுக்கு மேற்குறித்த ஆவணங்கள் இன்மையால் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஆகவே, இவர்களின் கஷ்டங்களைப் போக்கும் முகமாக அந்தந்தக் கிராமங்களிலேயே காலம் கடந்த பதிவுகள், பதிவு செய்யும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

செம்பியன்பற்று வடக்கு, தெற்கு கிராம அலுவலர் பிரிவுகளில் பதிவு வேலைகள் முடிவுற்றுள்ளதாகவும், தொடர்ந்து மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆளியவளை கிராம அலுவலர் பிரிவுகளில் காலம் கடந்த பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (70)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(10.07.2011 – ஞாயிற்றுக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம் ஆனி 25 ஆம் நாள்.

ராகுகாலம் 4.28–5.58, சுபநேரம் 8.58 –10.28,

நட்சத்திரம் சுவாதி பி.ப. 1.10 வரை

திதி: தசமி மு.இ. 7.27 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், கடன் வசூல், இறை சிந்தனை.

ரிஷபம:– பணக் கஷ்டம், குடும்பத்தில் சபலம், கடன் தொல்லை, ஆலய வழிபாடு, நண்பர் வருகை.

மிதுனம் :– பண வரவு, குடும்பத்தில் குதூகலம், கடன் வசூல், தர்ம சிந்தனை, தேக ஆரோக்கியம்.

கடகம்:– பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, நண்பர் தொல்லை, இறை சிந்தனை, உடல்நலக்குறைவு.

சிம்மம்:– பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, கடன் வசூல், பொருள் வரவு, தேக ஆரோக்கியம்.

கன்னி :– பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, தேக ஆரோக்கியம், கடன் தொல்லை, மனச் சோர்வு

துலாம் :– பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், கடன் வசூல், நண்பர் வருகை.

விருச்சிகம்:– பண வரவு, குடும்பத்தில் குதூகலம், உடல் சுகக்குறைவு, நண்பர் தொல்லை, விபத்து.

தனுசு:– பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, கடன் வசூல், கோயில் வழிபாடு, நன்மை.

மகரம்:– பண வரவு, குடும்பத்தில் கவலை, கடன் தொல்லை, நண்பர் வருகை, விபத்து.

கும்பம் :– பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, தேக நலக் குறைவு, உறவினர் தொல்லை, இறை சிந்தனை.

மீனம்:– பண வரவு, குடும்பத்தில் கவலை, வைத்தியச் செலவு, தேக நலக் குறைவு, நண்பர் வருகை.

## ஊடகப் பயிற்சி செயலமர்வு

(வவுனியா)

வெகுசன ஊடகம் மற்றும் தகவல் அமைச்சு அரசாங்கத் தகவல் திணைக்களத்துடன் இணைந்து நடத்துகின்ற எசிதிசி வினிச வெகுசன ஊடகப்பயிற்சி செயலமர்வு வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுதது கின்ற பிரதேச ஊடகவியலாளர்களுக்கு எதிர்வரும் 30, 31 ஆம் திகதிகளில் கொக்காவில் இலங்கை சமிக்ஞைகள் படையணியின் கணினிப்பயிற்சித் தலைமையகத்தில் நடத்துவதற்கு தகவல் அமைச்சு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது என அமைச்சின் செயலாளர் பி.கணேகல அறிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சி நெறியினை வெகுசன ஊடகம் மற்றும் தகவல்துறை அமைச்சர் கலாநிதி கெஹெலிய ரம்புக்வெல வைபவரீதியாக ஆரம்பித்துவைப்பார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. வன்னிப்பிரதேச ஊடகவியலாளர்களுக்குத் தகவல் அமைச்சினால் ஏற்பாடு செய்துள்ள முதலாவது செயலமர்வு இது என்பது குறிப்பிடத்தக்கது. (39)

## புதிய தலைவர் நியமனம்

(வவுனியா)

வவுனியா நகர சபைக்கு புதிய தலைவராக ஐ.கனகையா நியமிக்கப்பட்டுள்ளார் என வவுனியா மாவட்ட தேர்தல் உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார் புதிய தலைவர் திங்கட்கிழமை சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. நீண்டகாலம் தலைவர் நியமிக்கப்படாததினால் சபையின் செயற்பாடுகள் முடங்கியது சிலவாரத்திற்கு முன்னர் ஒரு இணக்கப்பாட்டுடன் உப தலைவர தலைமையில் சபைக்கூட்டங்கள் நடைபெற்றது. சபையின் அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு வழங்கினார்கள் என்பது குறிப்பிடதக்கது. (39)



நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இளைஞர்களுக்கான சர்வமத ஆன்மீக கருத்தரங்கில் சர்வமத தலைவர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும், மாணவிகளின் நாட்டியாஞ்சலி நிகழ்வையும் காணலாம். (பா)

# வடமாகாண மெய்வல்லுநர் போட்டியில் சாதனை படைத்த மாணவர்கள் விபரம்

(வவுனியா)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த 5ஆம் திகதி முதல் எட்டாம் திகதி வரை வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் சுவட்டு, மைதான நிகழ்ச்சிகளில் ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் சாதனையாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு:

இதில் பெண்கள் பிரிவு சுவட்டு நிகழ்ச்சியில் 11 வயதுப் பிரிவில் ஏ. அருணா (யாழ். கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை), 13 வயதுப் பிரிவில் பி. கிருஷாந்தி (வ. ஓமந்தை மத்திய கல்லூரி), 15 வயதுப் பிரிவில் எஸ். ஆரணி (யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), 17 வயதுப் பிரிவில் (யாழ். வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி), 19 வயதுப் பிரிவில் ஆர். ஜக்சனா (யாழ். அருணோதயாக் கல்லூரி), 21 வயதுப் பிரிவில் ஆர்.காவேரி (யாழ். அருணோதயக் கல்லூரி)

ஆண்களின் சுவட்டு நிகழ்ச்சியில் 11 வயதுப் பிரிவில் பி. டெவிஸ் (மன்னார் மாவிலங்கேணி றோ.க.த.க. பாடசாலை), 13 வயதுப் பிரிவில் என். சுமன் (யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), 15 வயதுப் பிரிவில் ஜி. ருமேஸ்சத்தியேசு (மன். சென் சேவியர் கல்லூரி), 17 வயதுப் பிரிவில் ஜே. ஜனந்தன் (யாழ். மகாஜனாக் கல்லூரி), 19 வயதுப் பிரிவில் ஜி. சிவேந்திரன் (யாழ். யாழ். இந்துக் கல்லூரி), 21 வயதுப் பிரிவில் எட்வேட் எடின் (யாழ் யாழ் இந்துக் கல்லூரி)

மைதான நிகழ்ச்சியில் பெண்கள் பிரிவு : 11 வயதுப் பிரிவில் ஜெ. ஜெனிற்றா (யாழ். எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம்), 13 வயதுப் பிரிவில் பி. சாத்விகா (யாழ். அருணோதயாக் கல்லூரி), 15 வயதுப் பிரிவில் எஸ். ஆரணி (யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), 17 வயதுப் பிரிவில் வி. யோகமைதிலினி (யாழ். வட இந்து மகளிர் கல்லூரி), 19 வயதுப் பிரிவில் ஏ. பவித்திரா (யாழ். அருணோதயாக் கல்லூரி, 21 வயதுப் பிரிவில் ரி. பிரியதர்சினி (யாழ். அருணோதயாக் கல்லூரி)

ஆண்கள் பிரிவு: 11 வயதுப் பிரிவில் ஜேசுதாசன் குருஸ் (மன்னார் சென் ஆன்ஸ் கல்லூரி), 13 வயதுப் பிரிவில் கே. டிலக்ஸன் (யாழ். கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்), 15 வயதுப் பிரிவில் ஆர். செந்தூரன் (யாழ். இந்துக் கல்லூரி), 17 வயதுப் பிரிவில் ஜே. தனுசன் (யாழ். எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம்), 19 வயதுப் பிரிவில் ஜே. ஜஸ்மினன் (யாழ். இந்துக் கல்லூரி) 21 வயதுப் பிரிவில் ஏ. டொமின்கோ (மன்னார் சென் ஆன்ஸ் கல்லூரி),

இவர்களுக்கான பதக்கங்களையும், வெற்றிக் கேடயங்களையும் வடமாகாண கல்வி மற்றும் விளையாட்டு பண்பாட்டலுவலகத்தின் செயலாளரும் நிகழ்வின் பிரதம விருந்தினருமான எஸ். இளங்கோவன் வழங்கினார். (12)

# வலுவூட்ட நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விளையாட்டுக் கழகங்களையும் விளையாட்டு வீரர்களையும் வலுவூட்டும் நடவடிக்கை ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலைகளில் விளையாட்டுத் திறனை வளர்க்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்படி கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் பாடசாலை மாணவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக விளையாடடுத் துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கலந்து கொள்ளவுள்ளார்.

இதைத் தொடர்ந்து மாவட்டத்தின் ஏனைய விளையாட்டுக் கழகங்களுக்கும் விளையாட்டு வீரர்களுக்குமான வலுவூட்டலுக்கான ஏற்பாடுகளை அமைச்சர் ஆரம்பித்து வைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அநுராதபுர அணிக்கெதிரான போட்டி; போராடித் தோற்றது சென். பற்றிக்ஸ்

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் மத்திய மகா வித்தியாலய அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி போராடித் தோற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு இரண்டுக்கான 17 வயது அணிகளுக்கிடையிலான 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் போட்டி நேற்று முன்தினம் சென் பற்றிக்ஸ் மைதானத்தில் இடம்பெற்றது.




இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இற்கமைய களமிறங்கிய சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி, 40 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரி. மொறிஸ் 31, லிவின்டன் 16 ஓட்டங் களைப் பெற்றனர். பந்து வீச்சில் எஸ். என். செவெண்டா 13 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு ஆடிய அநுராதபுரம் மத்திய மகாவித்தியாலய அணி 27.1 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக் களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் எஸ்.என். செவெண்டா 55, சமீரா 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஜித் டர்வின் சிறப்பாகச் செயற்பட்டு நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதேவேளை, பிரிவு இரண்டின் 'எச்' குழுவில் இடம்பெற்றிருந்த மேற்படி இரு பாடசாலை அணிகளும் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் 2366 புள்ளிகளைப் பெற்று முதலிடம் பிடித்த யாழ். மாவட்டத்திற்கான கேடயத்தினை வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இளங்கோவன், வீராங்கனையிடம் வழங்குவதையும், மாவட்ட அதிகாரிகள் நிற்பதனையும் காணலாம். (12)

# சிங்கப்பூரை வீழ்த்தியது இலங்கை அணி

(கொழும்பு)

சிங்கப்பூரில் நடைபெறும் 13 ஆவது உலகக் கிண்ண வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இலங்கை அணி நேற்று முன்தினம் சிங்கப்பூர் அணியை 62-51 கோல்கள் விகிதத்தில் வென்றது.

இப்போட்டிகளில் இலங்கை பெற்ற முதல் வெற்றி இதுவாகும்.

இத்தொடரின் முதல் சுற்றில் தனது 3 போட்டிகளிலும் இலங்கை தோல்வியுற்றதால் பிரதான தொடரிலிருந்து இலங்கை அணி வெளியேறியது.

அதன்பின் அணிகளின் தரப்படுத்தலுக்கான போட்டிகளில் இலங்கை அணி பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

# குயிலினியன், டேவிற் சிறப்பான செயற்பாடு 40 ஓட்டங்களால் வென்றது சென். ஜோன்ஸ்

(யாழ்ப்பாணம்)

குயிலினியன், டேவிற் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் ஹாட்லிக் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 40 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றுக்கான 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் போட்டியிலேயே சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இப்போட்டி நேற்று முன்தினம் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியின் 'பி' அணியும் ஹாட்லிக் கல்லூரி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஹாட்லிக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 44.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குயிலினியன் 58, சிவேஸ்கர் ஆட்டமிழக்காது 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அனந்தசயன், அஜந்தன், அஜந்த் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய ஹாட்லிக் கல்லூரி அணி 32.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் 122 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ஜெயப்பிரசாத் 19, அனந்தசயன் 16, அஜந்தன் 18, வனகுணன் ஆட்டமிழக்காது 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டேவிற் 38 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினர். மற்றும் யூட் சிறிசன் மூன்று, நலீர் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

# பிரிவு மூன்றுக்கான போட்டிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றுக்கான ஒரு நாள் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் 15, 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டிகளே நடைபெற்று வருகின்றது.

இத்தொடரின் முதல் சுற்று ஆட்டங்கள் இரண்டாம் தவணைப் பரீட்சைக்கு முன்னர் நிறைவடையும் என்றும், தொடர்ந்து இரண்டாவது சுற்று ஆட்டங்கள் அதன் பின்னர் நடைபெறும் என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# இரண்டாவது சுற்று முதல் போட்டியில் விண்டோஸ் அணி வெற்றிபெற்றது

(மட்டுவில்)

**மட்டுவில் கண்ணகி விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையில் இடம்பெற்ற மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றுது.**

**மேற்படி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் இப்போட்டியில், நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் சாவகச்சேரி விண்டோஸ் அணியை எதிர்த்து கைதடி நவசக்தி அணி மோதியது. இதில் சாவகச்சேரி விண்டோஸ் அணி 73 ஓட்டங்களால் வெற்றி பெற்றுக் கொண்டது. இதேவேளை, இன்று நடைபெறும் போட்டியில் காலை 8 மணிக்கு மட்டுவில் வளர்மதி அணியை எதிர்த்து சதீஸ் அணியும், காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி சிவன் அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் அணியும் மோதவுள்ளன. பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும் போட்டியில் மீசாலை நியூ பவர் அணியை எதிர்த்து கைதடி குமரநகர் அணியும், 4.00 மணிக்கு சாவகச்சேரி விண்டோஸ் அணியை எதிர்த்து கைதடி வளர்மதி அணியும் மோதவுள்ளன. (118)**

# இலங்கை வீரருக்குப் பதக்கம்

(டோக்கியோ)

ஜப்பானில் நடைபெறும் ஆசிய மெய்வன்மை சம்பியன்ஷிப் போட்டிகளின் 1500 மீற்றர் ஓட்டத்தில் இலங்கை வீரர் சமிந்த விஜேகோன் வெண்கலப் பதக்கமொன்றை வென்றார். இப்போட்டிகளில் இலங்கை பெற்ற முதலாவது பதக்கம் இதுவாகும். அவர் 3.40.78 நிமிடங்களில் ஓடி முடித்தார்.

இதேவேளை, 400 மீற்றர் தடை தாண்டல் போட்டியில், நேற்று நடைபெற்ற முதலாவது சுற்றில் இலங்கை வீராங்கனை கிறிஸ்டைன் மெரில் 56.83 விநாடிகளில் ஓடி முடித்தார். இது புதிய இலங்கைச் சாதனையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தின் முதல் சுற்றில் இலங்கை வீரர் பிரசன்ன அமரசேகர 3 ஆவது இடம் பெற்று வெளியேறினார்.

100 மீற்றர் ஓட்டத்தின் அரையிறுதியில் இலங்கை வீரர் ஷெஹான் அம்பேபிட்டிய 6 ஆவது இடத்தையே பெற்றதால் இறுதிச் சுற்றுக்கு தகுதி பெறத் தவறினார்.

## இந்திய வீரருக்கு தங்கப் பதக்கம்

பிரசிடன்ட் கோப்பை குத்துச்சண்டை தொடரில் இந்திய வீரர் சந்தோஷ் குமார் (64 கி.கி) தங்கம் வென்று சாதித்தார்.

இந்தோனேஷிய தலைநகர் ஜகார்தாவில் ஏழு ஆண்டுகளுக்கு பின் 21ஆவது பிரசிடன்ட் கோப்பை குத்துச்சண்டை தொடர் நடக்கிறது.

இதில் நேற்று முன்தினம் நடந்த 64 கி.கி இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சந்தோஷ் குமார், ரஷ்யாவின் மாலினின் அலெக்சாண்டரை எதிர்கொண்டார்.

இதில் அபாரமாக செயற்பட்ட சந்தோஷ் குமார் 10 - 8 என்ற கணக்கில் வெற்றி பெற்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார். இவர் கடைசியாக கடந்த 2008 இல் புனேவில் நடந்த இளைஞர்களுக்கான காமன்வெல்த் போட்டியில் தங்கம் வென்றார். நேற்று முன்தினம் நடந்த மற்ற அரை யிறுதி போட்டிகளில், ஜாஸ்வர் சிங்(81 கி.கி), லக்பிர் சிங்(69 கி.கி) உள்ளிட்ட இந்திய வீரர்கள் தோல்வி அடைந்து வெண்கலம் வென்றனர்.

## 600 விக்கெட் என்ற சாதனையை எளிதில் அடைவாராம் ஹர்பஜன்




காலம் இப்போது எனக்குச் சாதகமாக இருப்பதாக நினைக்கின்றேன். இதனைப் பயன்படுத்தி 200 விக்கெட்டுகளை வீழ்த்தி 600 விக்கெட் என்ற சாதனையை எளிதில் அடைந்துவிடுவேன் என்று நம்புகிறேன் என ஹர்பஜன்சிங் தெரிவித்தார்.

பல முறை ஏற்ற, இறக்கங்களை சந்தித்துள்ளேன். அதில் அதிகபட்சம் இறக்கங்களையே கண்டுள்ளேன். இந்த சாதனையை எட்டுவதற்காக கடுமையாக உழைத்தேன். சுழற்பந்துவீச்சாளர்களைப் பொறுத்தவரையில் வயது ஏறும்போது தான் சாதிப்பார்கள். அனில் கும்ப்ளே, ஷேன் வோர்ன் ஆகியோர் 30 வயதுக் குப் பிறகுதான் நிறைய விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

காலம் இப்போது எனக்கு சாதகமாக இருப்பதாக நினைக்கிறேன். இப்போது வரை இளமையாக இருப்பதாக உணர்கிறேன். நிறைய கிரிக்கெட் ஆர்வம் உள்ளது. இந்தியாவுக்காக சிறப்பாக விளையாடி, நிறைய விக்கெட்டுகளை வீழ்த்துவேன். எனது உடல்திறன் நன்றாக இருக்கும் வரை என்னால் சிறப்பாக ஆட முடியும். சர்வதேச போட்டியில் ஒரு விக்கெட் வீழ்த்துவது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. துடுப்பாட்ட வீரர்கள் நமது பந்துவீச்சை மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருப்பார்கள். எனவே வெவ்வேறு வகையாக பந்துவீச வேண்டும்.

அசாருதீன் தலைவராக இருந்தபோது இந்திய அணியில் இடம்பிடித்தேன். அதன்பிறகு சச்சின், கங்குலி தலைமையில் விளையாடினேன். கங்குலி தலைவராக இருந்தபோது எனக்கு நிறைய நம்பிக்கைகள் ஏற்பட்டன. அவருடைய தலைமையின் கீழ்தான் நிறைய விக்கெட்டுகளை வீழ்த்தினேன். அவர் எனக்கு எல்லா வழிகளிலும் உதவியாக இருந் தார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



வொஷிங்டனில் அமெரிக்க நட்சத்திர ரென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் வளர்ந்துவரும் சிறுமிகளுக்கு ரென்னிஸ் பயிற்சி அளிப்பதைக் காணலாம்.

## பார்சிலோனா சிறந்த அணியென்றாலும் அதனையும் தோற்கடிக்க முடியுமாம்

(லண்டன்)

பார்சிலோனா அணி சிறந்த அணிதான். இருப்பினும் அதனைத் தோற்கடிக்க முடியாது என்று நினைப்பது தவறு என ஆஷ்லே கோலே தெரிவித்தார்.

தமது அணி பார்கிலேஸ் பிரிமியர் லீக் மற்றும் யுபா சம்பியன் லீக் போட்டியில் வரும் சீசனில் வெற்றி பெறும் என அவர் உறுதியளித்துள்ளார். கால்பந்து உலகில் பார்சிலோனா அணி அற்புதமான அணி. அதனால் அந்த அணியைத் தோற்கடிக்க முடியாது எனக் கருதக்கூடாது என கோலே தெரிவித்தார். ஐரோப்பிய கால்பந்து களத்தில் மிகப்பெரும் பரிசுப்போட்டியில் பார்சிலோனா அணி 3-1 கோல் கணக்கில் மான்செஸ்டர் யுனைடெட் அணியைத் தோற்கடித்தது. இருப்பினும், பார்சிலோனா அணியை நம்பிக்கையுடன் எதிர்கொள்வோம் என இங்கிலாந்தின் சர்வதேச வீரர் கோலே நம்பிக்கை தெரிவித்தார். சம்பியன் லீக் இறுதிப்போட்டியின் போது, மான்செஸ்டர் யுனைடெட் அணி வெற்றி பெறும் என்றே கருதினோம். ஆனால் பார்சிலோனா அணி நம்ப முடியாத வகையில் ஆடியது. அவர்கள் எந்திரம் போல ஆடினார்கள். பார்சிலோனாவை வீழ்த்த முடியாது என மக்கள் நினைப்பதற்கு இதுதான் காரணம் என கோலே தெரிவித்தார். பிரிமியர் லீக் கால்பந்து போட்டியில் மான்செஸ்டர் யுனைடெட் அணியிடம் இருந்து இந்த சீசனில் பரிசுக்கோப்பையைக் கைப்பற்ற வேண்டும் என்ற அவர் ஓல்டு டிரா போர்டில் 2 - 1 கோல் கணக்கில் மான்செஸ்டரிடம் தோற்றதையும் வேதனையுடன் தெரிவித்தார்.

## ஊக்க மருந்துப் பரிசோதனை; 2 வருட தடை விதிக்கப்படும்



(புதுடில்லி)

இரண்டாவது கட்டப் பரிசோதனையிலும் ஊக்கமருந்து பயன்படுத்தியது உறுதியாகி இருப்பதால் சினி ஜோஸ், முர்மு, டயானா ஆகிய வீராங்கனைகள் 2 ஆண்டு தடையை எதிர்நோக்கி உள்ளனர்.

பெரும்பாலும் இவ்வாறு சிக்கும் வீராங்கனைகள் 2ஆவது கட்டச் சோதனையான 'பி' மாதிரி சோதனையையும் நடத்த கோருவார்கள். அதாவது ஊக்கமருந்து சோதனைகளுக்காக சேகரிக்கப்படும் வீராங்கனைகளின் சிறுநீர் மாதிரி இரண்டு போத்தல்களில் வைக்கப்படும். முதல் போத்தலில் மட்டுமே முதலில் சோதனை நடத்தப்படும். இன்னொரு மாதிரி பாதுகாப்பாக வைக்கப்படும். சந்தேகம் ஏற்படும் போது அவற்றையும் சோதிப்பார்கள். அது தான் 'பி' மாதிரி சோதனையாகும்.

மேற்கண்ட மூன்று வீராங்கனைகளின் 'பி' மாதிரி சோதனையும் தேசிய ஊக்கமருந்து தடுப்பு கழக சோதனைச் கூடத்தில் நடத்தப்பட்டது. இதன் முடிவு நேற்று முன்தினம் வெளியானது. 2ஆவது கட்டச் சோதனையிலும் அவர்கள் ஊக்கமருந்து உட்கொண்டது உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இனி அவர்கள் ஊக்கமருந்து தடுப்புக் கழகத்தின் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் முன்பு விசாரணைக்கு ஆஜராவார்கள். முதல்முறையாக இவர்கள் ஊக்கமருந்து குற்றச்சாட்டில் சிக்கி இருப்பதால், அவர்கள் மீதான புகார் உறுதி செய்யப்பட்டால், அதிகபட்சமாக 2 ஆண்டுகள் வரை விளையாடத் தடை விதிக்கப்படும்.




நட்வெஸ்ட் கிண்ண மகளிர் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்ரேலிய அணியைத் தோற்கடித்து இங்கிலாந்து அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி எட்டு விக்கெட்டுக்களை இழந்து 230 ஓட்டங்களை எடுத்தது. பதிலுக்கு 231 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி எனக் களமிறங்கிய அவுஸ்ரேலிய மகளிர் அணி 47.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றுக் தோல்வியைத் தழுவியது.

## தேசிய மட்ட உதைபந்தாட்டம் பதுளையில் நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றம் ஏற்பாடு செய்துள்ள 23ஆவது விளையாட்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்படும் அகில இலங்கை ரீதியான உதைப்பந்தாட்ட போட்டி நேற்று சனிக்கிழமை காலை பதுளை வின்சன்ட் டயஸ் விளையாட்டு அரங்கில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாடு முழுவதுமிருந்து 25 அணிகள் பங்கு கொள்கின்றன. யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு. கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, உள்ளிட்ட இளைஞர் சேவைகள் மன்ற உதைப்பந்தாட்ட அணிகள் போட்டிகளில் பங்கு கொண்டுள்ளன.

நேற்றைய போட்டிகளை பதுளை மாநகர முதல்வர் உபாலி நிஸங்க குணசேகர உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இளைஞர் சேவை மன்ற பணிப்பாளர்கள், அதிகாரிகள் உள்ளிட்ட பலர் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டனர்.

போட்டியில் கலந்துகொள்ளும் யாழ். மாவட்ட அணி



# காணிப் பிணக்குகளை தீர்க்காதுவிடின் பயங்கரவாதத்திற்கு வழி கோலிவிடும்

## எச்சரிக்கிறார் அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோன்

(கொழும்பு)

காணிப் பிணக்குகள் பயங்கரவாதத்திற்கு வழிகோலும் என காணி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார். காணிப் பிரச்சினைகள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். பொத்துவில் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாத நடவடிக்கைகளினால் காணிப் பிரச்சினைகள் அதிகளவில் ஏற்பட்டதாகவும் குறிப்பாக முஸ்லிம் மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், பலர் இருப்பிடங்களை இழந்து இடம்பெயர்ந்து வாழ்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண முஸ்லிம்களின் காணிகளை அபகரித்து, புலிகள் மாவீரர் குடும்பங்களுக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் விரைவில் தீர்வு காணப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சிலவகை தொழிலாளர்களுக்காக முன்கூட்டிய வாக்குப்பதிவுத் திட்டம்

(கொழும்பு)

முன்கூட்டியே வாக்குகளைப் பதிவு செய்யும் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது. குறிப்பாக சிலவகைத் தொழில்களில் ஈடுபடுவோர் தேர்தல் தினத்தில் வாக்களிப்பது நடைமுறைச் சாத்தியமற்றது. என சுட்டிக்காட்டப்பட்டள்ளதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையை அறிமுகப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

இலத்திரனியல் வாக்களிப்பு முறைமை அறிமுகம் செய்வதற்கு அநேகமான கட்சிகள் இணக்கத்தை வெளியிட்டுள்ளன. பாரதி எலக்ட்ரோனிக் என்ற இந்திய நிறுவனம் இலத்திரனியல் வாக்கெடுப்பு முறைமை குறித்த பரீட்சார்த்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இதேவேளை, முன்கூட்டியே வாக்குகளைப் பதிவு செய்யும் திட்டமொன்றும் அறிமுகம் செய்யப்படவுள்ளது. குறிப்பாக சில வகைத் தொழில்களில் ஈடுபடுவோர் தேர்தல் தினத்தில் வாக்களிப்பது நடைமுறைச் சாத்தியமற்றது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறானவர்கள் தேர்தல் தினத்திற்கு முன்னதாகவே தங்களது வாக்குகளை பதிவு செய்யக் கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க விசேட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

குறிப்பிட்ட சில துறைகளைச் சார்ந்தவர்கள் மட்டுமே தற்போது தபால் மூலம் முன்கூட்டியே வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவர்கள் மீனவர்கள் விமான நிலைய பணியாளர்கள் உள்ளிட்ட பலருக்கு சந்தர்ப்பம் வழங்கும் நோக்கில் இப்புதிய திட்டம் அமுல்படுத்தப்பட உள்ளது என்றார்.

# இலங்கைமீது ஆதிக்கம் செலுத்த இந்திய அரசு முயற்சிக்கவில்லை

## அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்



(கொழும்பு)

**இந்தியாவை ஒதுக்கிவிட்டு நாம்பொருளாதார வளர்ச்சி என்ற இலக்கை எட்ட முடியாது. அதேவேளை இலங்கை மீது இந்தியா ஆதிக்கம் செலுத்தவில்லை. மாறாக உதவி செய்வதற்கே அது முன்வந்துள்ளதென வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

இலங்கை நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்றுக்குப் பதிலளித்துப் பேசும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தியாவுடன் இணைந்து கூட்டறிக்கையே வெளியிடப்பட்டது. இது உடன்பாடு அல்ல. இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு உதவவே இந்தியா விரும்புகிறது.

தேசிய ரீதியான ஒரு தீர்வையே காண நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிக்க முடிவு செய்துள்ளோம். இது காலத்தை இழுத்தடிக்கும் வேலை என சிலர் எண்ணலாம்.

ஆனால் உண்மையில் இது காலத்தை இழுத்தடிக்கும் வேலையல்ல. தீர்வை மிக விரைவாக பெற்றுக் கொடுப்பதே எமது நோக்கம்.

இப்போது புலிகளின் இராணுவ ரீதியான தாக்குதல்கள் இல்லாவிட்டாலும் அவர்கள் வேறுவிதமான தாக்குதல்களை தொடர்ந்துள்ளனர். பொருளாதார ரீதியாக எம்மைப் பலமிழக்கச் செய்ய முற்படுகிறார்கள்.

இலங்கைக்கு வரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை தடுக்க முற்படுகின்றனர்.

சூடானுடன் இலங்கையைச் சிலர் ஒப்பிட முற்படுகின்றனர். ஆனால் சூடானுடன் இலங்கையை ஒப்பிட முடியாது.

நாடு கடந்த அரசு என்று எதுவும் கிடையாது. இவ்வாறான ஒன்றை எந்த நாடும் ஏற்றுக் கொள்ளவும் இல்லை.

இலங்கையின் 50 வீதத்துக்கும் அதிகமான ஏற்றுமதிகள் ஐரோப்பிய நாடுகளுக்கே செல்லுகின்றன.

எனவே பொருளாதார ரீதியில், உலகமயமாக்கல் ரீதியில்- இந்த நாடுகளுடன் இணைந்து எமது பொருளாதாரத்தை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதற்காக அந்த நாடுகளுக்கு நாம் அடிபணிகிறோம் என்று பொருளல்ல.

இந்த ரீதியில்தான் நாம் இந்தியாவுடனும் எமது உறவைப் பேணி வருகின்றோம். இந்தியாவுடன் எமக்கு நெருங்கிய தொடர்புகள் உள்ளன. இது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. சகல துறைகளிலும் தொடர்புகள் உள்ளன.

இந்தியா இன்று இலங்கைக்கு நெருக்கமான பாரிய வர்த்தக நண்பராக மாறியுள்ளது. இந்தியாவுடன் வர்த்தக ரீதியாகக் கொண்டுள்ள உடன்பாடுகளின்படி பொருளாதார ரீதியில் பாரிய நன்மைகளை நம்நாடு அடையவுள்ளது.

இங்கிருந்து இந்தியா ஏதோவொன்றை அள்ளிக்கொண்டு போகப்போகிறது என்று நினைப்பது தவறு.

இந்தியா தொடர்பாக குரோத மனப்பான்மையுடன் பார்க்க வேண்டாம். இந்தியாவை ஒதுக்கி விட்டு இலங்கையினால் பொருளாதார வளர்ச்சி இலக்கை எட்டமுடியாது.

இந்தியா ஊடாகத் தான் எமது இலக்கை அடைய முடியும் என்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

# சட்டவிரோத தேர்தல் பிரசாரங்கள்; தடுக்க பொலிஸாருக்கு ஆலோசனை

(கொழும்பு)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுடன் தொடர்புடைய சட்டவிரோத தேர்தல் பிரசார நடவடிக்கைகளை தடுப்பது தொடர்பாக பொலிஸ் நிலையங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் பாதுகாப்பு கடமைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் காமினி நவரத்ன கூறியுள்ளார்.

தேர்தலுக்கான பாதுகாப்புத் திட்டங்கள் ஏற்கனவே வகுக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக இம்முறை தேர்தலில் போட்டியிட்வுள்ள வேட்பாளர்களை பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்து ஆலோசனைகளை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான நடவடிக்கைகள் தற்போது அமைதியான முறையில் இடம்பெற்று வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.



பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியின் பூதவுடலுக்கு தெகிவளையில் உள்ள அவரின் இல்லத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் ஆகியோர் நேற்றுமுன்தினம் அஞ்சலி செலுத்துவதைக் காணலாம்.

# பொலிஸ் சேவையில் மாற்றத்தை ஏற்படுத்த பிரதேச அதிகாரிகளின் ஆதரவு அவசியம்

## ஆசியமனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிப்பு



(கொழும்பு)

பொலிஸ் சேவையில் மாற்றம் ஏற்படுத்துவது அவசியம் எனில், பிரதேச பொலிஸ் அதிகாரிகளின் ஆதரவை புதிய பொலிஸ் மா அதிபர் பெற்றுக் கொள்ள வேண்டும் என ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வது குறித்து பொலிஸ் மாஅதிபர் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்று ஆணைக்குழுவின் கொள்கை வகுப்பு பணிப்பாளர் பசில்பெர்னாண்டோ குறிப்பிட்டார்

அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் இடம் பெறும் சம்பவங்களை கண்காணிக்கும் அதிகாரம் உதவி பொலிஸ் அத்தியட்சகர்களிடம் காணப்படுகின்றது.

குறிப்பாக பொலிஸ் நிலையப் பொறுபப்திகாரிகளின் கடமைகள், நாளாந்த பொலிஸ் விசாரணைகளின் முன்னேற்றம், பொலிஸ் குறிப்பேடுகளின் தன்மை ஆகிய விடயங்களைக் கண்காணிக்கும் அதிகாரம் உதவிபொலிஸ் அத்தியட்சகர்களிடமே உள்ளது.

இலங்கை பொலிஸ் துறையில் மாற்றம் கொண்டு வருவதாயின், உதவி பொலிஸ் அத்தியட்சகர்களை சட்ட வரையறைக்குள் கொண்டு வருவதுடன், பொலிஸ்துறையை அவர்களின் கண்காணிப்பின் கீழ் கொண்டு வருவதன் மூலம் மாத்திரமே குற்றச்செயல்களைத் தடுக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொலிஸ் நிலையங்களுக்குள் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலமே நாடு முழுவதும் இடம்பெறுகின்ற பாரியளவிலான குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

# குடாநாட்டில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரிப்பென தீய சக்திகள் பிரசாரத்தை மேற்கொள்கின்றன

## கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க



(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் அரசியல் இலாபம் தேடும் வகையில் சிலர் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹதுருசிங்க தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுவதாக சிலர் திரிபுபடுத்தி பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு கூறப்படும் செய்திகளில் எந்தவித உண்மையும் கிடையாது என்று பொறுப்புடன் கூறிக்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார். கொழும்பிலுள்ள ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவித்தாவது,

தேர்தல் காலங்களில் இது போன்ற செயற்பாடுகளில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உட்பட சில தீய சக்திகள் ஈடுபடுவது வழக்கம். எனவே இது அரசியல் இலாபத்தை கருதியே செய்யப்படுகின்றது என்றார். தென்பகுதி உட்பட ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் யாழ். மாவட்டத்தில் மிகவும் குறைவான சம்பவங்களே பதிவாகின்றன. சில தனிப்பட்ட சம்பவங்களையும் சிலர் அரசியல் மயப்படுத்த முயற்சிக்கின்றனர்.

வடக்கில் அரசாங்கம் பாரிய உட்கட்டமைப்பு வசதிகளுடன் பொருளாதார வாழ்வாதார, விவசாய, மீன்பிடி, சுகாதார மேம்பாட்டுத்திட்டங்களை பாரிய அளவில் மேற்கொண்டு வருகின்றது. மக்கள் எந்தவித கெடுபிடிகளும், துன்பங்களும் இன்றி நிம்மதியாகவும், சந்தோசமாகவும் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் அரசின் இந்த செயற்பாடுகளை விரும்பாத சிலர் வடக்கில் மாத்திரமின்றி தென்பகுதிகளிலும் இது போன்ற உண்மைக்குப் புறம்பான பிரசாரங்களை மேற்கொண்டும் திரிபுபடுத்தியும் வருகின்றனர் என்றார்.

குடாநாட்டிலுள்ள மக்களின் நலனைக் கருதி அவர்களது வேண்டுகோளுக்கிணங்க திட்டமிடப்பட்ட வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்த கட்டளைத் தளபதி, விசேட ரோந்து குழுக்கள், இராணுவம், பொலிஸ் விசேட குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக சகல பிரதேசங்களிலும் சமூகக் குழுக்கள் அமைக்கப்பட்டு அதன் ஊடாக இராணுவத்தினர், பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் வடக்கில் எந்தவித பாரிய அசம்பாவிதங்களும் இடம்பெற இடமளிக்கப் போவதில்லை என்றார்.வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் சில தீய சக்திகள் அரசியல் இலாபத்திற்காக அசம்பாவிதங்களை ஏற்படுத்த முயற்சிக்கலாம். சகல சவால்களுக்கும் முகம் கொடுக்கும் வகையில் திட்டமிடப்பட்ட அடிப்படையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

பாதுகாப்புப் படையினரும், பொலிஸாரும் மக்களுடன் சினேக பூர்வமாக பழகிவருகின்றனர். மக்களுக்குத் தேவையான உதவி ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றனர். சுமுகமான நிலைமை தொடர்வதற்கு சகல தரப்பினரதும் ஒத்துழைப்புக்கள் மிகவும் அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

# வன்முறைகள் நிகழும் நிலையங்களுக்கு தேர்தல் திணைக்கள அதிகாரி நியமனம்

(கொழும்பு)

அதிக அஞ்சல் வாக்காளர் உள்ள மற்றும் பிரச்சினைகள் ஏற்படக் கூடிய வாக்களிப்பு நிலையங்களுக்கு தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படவுள்ளார்.

65 உள்ளூராட்சி மன்றங்களுக்கான அஞ்சல் வாக்களிப்புகள் எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ளன.

ஏற்கனவே இடம்பெற்ற வாக்குப் பதிவுகளின் போது, சில அதிகாரிகள் முறையாக தமது கடமையை செய்யவில்லை என முறைபாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் கடந்த தேர்தல்களில் முறையாக தேர்தல் கடமையில் ஈடுபடாத மூன்று அதிகாரிகள், திணைக்கள பணிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

காலை 8.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட வேண்டிய வாக்களிப்பு நடவடிக்கைகளை, அதற்கு முன்னர் ஆரம்பித்தாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

65 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வாக்குப் பதிவுகள் தொடர்பிலான முறைபாடுகளை சேகரிக்கும் நிலையம் ஒன்று, ராஜகிரியவில் நிறுவப்படவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி முதல் இந்த நிலையம் செயற்படவுள்ளது.

இதில் தமது முறைபாடுகளை தெரிவிப்பதற்காக 011-2877611 மற்றும் 0112868444 ஆகிய தொலை பேசி இலக்கங்களின் ஊடாக தொடர்பு கொள்ளுமாறு பொது மக்கள் கோரப்பட்டுள்ளனர்.

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் சுவாச மீள் உயிர்ப்பித்தல் பயிற்சி

(முல்லைத்தீவு)

இலங்கை செங்சிலுவைச் சங்கத்தின் முல்லைத்தீவு கிளையின் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் ஒரு கட்டமாக முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனையில் இதய சுவாச மீள் உயிர்ப்பித்தல் பயிற்சி தொடர்பான கருத்தரங்கு ஒன்று நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணிக்கு இடம் பெற்றுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை இலங்கை செஞ்சிலுவைச் சங்க முல்லைத்தீவு கிளையின் நிறைவேற்று அதிகாரி எஸ்.சதீஸ்வரன் மற்றும் மாவட்ட சுகாதார திணைக்களத்தினர் ஆகியோர் இணைந்து மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் மருத்துவ தாதியர்கள் உள்ளிட்டோர் பங்குபற்றினர்.

# சம்பள உயர்வு வழங்காவிடின் பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படும்

## மின்சாரசபை தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

மழை வீழ்ச்சி கிட்டாமை மற்றும் அனல்மின் நிலையங்களில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக மின் பிறப்பாக்க நடவடிக்கைகளில் இலங்கை மின்சார சபை பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது.

இந்த நிலையில் பகிஷ்கரிப்பை முன்னெடுக்க ஆயத்தமாவதாக மின்சார சபையின் தொழிற்சங்கங்கள் நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளன.

அரசாங்கத்தினால் தேக்கி வைக்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்பை மீள வழங்குமாறு அவை கோரிக்கை விடுத்துள்ளன.

இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பு மின்சார சபை பிரதான அலுவலகத்திற்கு முன்பாக கூடிய ஊழியர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மூன்று வருடங்களுக்கு ஒரு முறை தமக்கு சம்பள உயர்வு வழங்கப்படுவதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது தெரிவித்தனர்.

2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நவம்பர் மாதமே அது வழங்கப்பட்டதாக ஊழியர்கள் சுட்டிக்காட்டினர்.

அப்படியாயின் 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் வரையான சம்பள உயர்வை நன்கொடையாக எண்ணி தேக்கி வைத்துக் கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

# மசகு எண்ணை இறக்குமதி,வினியோகம்; பிரச்சினைகளைத் தடுக்க ஆராய்வுக்குழு

(கொழும்பு)

மசகு எண்ணெய் இறக்குமதி மற்றும் விநியோகத்தின் போது பிரச்சினைகள் ஏற்படுவதை தடுப்பதற்காக கையிருப்பு ஆராய்வுக் குழுவொன்றை நியமித்துள்ளதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்தக் குழுவின் தலைவராக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறியுள்ளார்.

குறித்த நிறுவனங்களின் உயரதிகாரிகளுக்கும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கும் இடையே நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவினர் நாளாந்தம் எரிபொருளின் அளவை கணக்கெடுக்கவுள்ளதுடன், ஒவ்வொரு வியாழக்கிழமையும் அதுபற்றிய அறிக்கையை அமைச்சிடம் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

அத்துடன் எரிபொருள் கொள்வனவிற்கான முழுப்பொறுப்பையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைத்துள்ளதாகவும் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை மசகு எண்ணெய் விநியோகத்திற்கான பொறுப்பு இலங்கை பெற்றோலிய இருப்பு களஞ்சியசாலையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பெற்றோல் தொடர்பில் கடந்த சில தினங்களில் ஏற்பட்ட பிரச்சினைகளை கவனத்திற்



கொண்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறினார்.

இனிவரும் காலங்களில் இத்தகைய பிரச்சினைகள் ஏற்படாத வண்ணம் இந்தக் குழு செயற்படவுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.



யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற யாழ்.மாவட்ட தேசிய கடற்தொழிலாளர் மகா சம்மேளனத்தின் அங்குரர்ப்பண நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, ராஜித சேனாரத்தின, டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.மாநகர முதல்வர் ஆகியோர் தேசிய கீதத்திற்கு மதிப்பளிப்பதனையும், பெண்னெருவருக்கு அமைச்சர் பசில் ராஜபக்ஷ வலைகளை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களின் ஒருபகுதியினையும் காணலாம். (படம் - பார்த்திபன்)

# வெளிநாடுகளுக்கான ராஜதந்திரிகள் நியமனம் போட்டிப்பரீட்சை மூலம் இடம்பெற வேண்டும்

## நாடாளுமன்றில் எதிர்க்கட்சி பிரதம கொறடா தெரிவிப்பு



(கொழும்பு)

வெளிநாட்டு இராஜதந்திர சேவைகளுக்கு நியமனங்கள் வழங்கும்போது போட்டிப் பரீட்சை மூலமே தெரிவுசெய்ய வேண்டும் என எதிர்க்கட்சிப் பிரதம கொரடாவான ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை சபாநாயகரின் அனுமதியுடன் கவனயீர்ப்புப் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்-

ஒருநாட்டின் பிரதிநிதியாக வெளிநாடுகளில் பணியாற்றுபவர்கள் மிகவும் பொறுபபுடன் செயற்பட வேண்டியவர்கள். வெளிநாட்டு இராஜதந்திர சேவையில் போதிய பயிற்சியும், அனுபவமும் உள்ளவர்கள் தான் வெளிநாட்டு இராஜதந்திரிகளாக நியமிக்கப்படவேண்டும்.

ஆனால் தற்பொழுது நமது நாட்டு இராஜதந்திரிகளாக முன்னாள் இராணுவ அதிகாரிகளே நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால் இலங்கையில் இராணுவ ஆட்சி தான் நடைபெறுகின்றதோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. வெளிநாடுகளில் ஏற்பட்டுள்ள இந்தச் சந்தேகத்தை நீக்க வேண்டியது அரசின் பொறுப்பு.

மேலம் பலர் இராஜதந்திர சேவைக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் எந்தவிதமான முன்னனுபவமும், முதிர்ச்சியும் இல்லாதவர்கள். இதனால் இராஜதந்திர சேவையில் கௌரவம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அரசின் இவ்வாறான நடவடிக்கைகளினால் அனுபவமிக்க புத்திஜீவிகள் நாட்டைவிட்டே வெளியேறியுள்ளனர். வெளிநாட்டு இராஜதந்திர சேவைக்கு ஆள்சேர்க்கும்போது போட்டிப் பரீட்சை மூலம்தான் தெரிவு செய்ய வேண்டும்

இலங்கை இன்று பல்வேறு இக்கட்டான நிலைமைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. தருஸ்மன் அறிக்கை தொடக்கம் சனல்-4 ஒளி, ஒலி நாடாவரையும் அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்தியுள்ளது. இவற்றை மறுக்கவும், இவற்றுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை எடுக்கவும் இலங்கை அரசு தவறிவிட்டது.

மேலும், வடக்கு, கிழக்கு நிலைமை, அங்கு மேற்கொள்ளப்படும் மீள்குடியேற்றம், அபிவிருத்திகள் ஆகியவை தொடர்பாகவும், சர்வதேச சமூகத்திற்குத் தெளிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் சர்வதேச சமூகம் நமது நாட்டின் மீதான நம்பிக்கையை இழந்துவிடும் நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

## தடுத்து வைக்கப்பட்டிருந்த 10 மீனவர்கள் விடுதலை

(கொழும்பு)

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பத்து இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் இந்திய கடல் எல்லைக்குள் சென்ற குற்றச்சாட்டின் பேரில் அந்த நாட்டு கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

குறித்த மீனவர்கள் விசாகப்பட்டினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் தெரிவித்தது.

இல்ங்கை மீனவர்களுடன் இந்திய அதிகாரிகளின் பொறுப்பிலிருந்த இரண்டு மீன்பிடிப் படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் லால் டி சில்வா தெரிவித்தார்.

இந்திய நாணய மதிப்பில் ஐந்து இலட்ச ரூபா செலுத்தப்பட்டதை அடுத்தே மீன்பிடிப் படகுகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

விடுதலையாகியுள்ள மீனவர்கள் சிலாபம் மற்றும் தேவேந்திர முனை பிரதேசங்களிலிருந்து கடலுக்குச் சென்றவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இவ்வாண்டின் முதல் 5 மாதங்களில் நாட்டின் நிதிப்பாய்ச்சல் அதிகரிப்பு

## மத்திய வங்கி தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களுக்குள் நாட்டின் நிதிப்பாய்ச்சல் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை தாண்டியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவிக்கின்றது. வருடத்தின் முதல் ஐந்து மாதங்களுக்குள் நிதிப்பாய்ச்சல் 17 தசம் 9 வீதமாக அதிகரித்துள்ளது.

தனியார் துறைக்கு வழங்கப்பட்டிருந்த கடனின் அளவு பாரியளவில் உயர்வடைந்தமையே இந்த காலப்பகுதிக்குள் நிதிப்பாய்ச்சல் துரிதமாக அதிகரித்தமைக்கு காரணம் என இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டுகின்றது.

இந்த வருடத்தின் அடுத்த சில மாதங்களுக்குள் நிதிப்பாய்ச்சல் உத்தேச மட்டத்தில் நிலவும் என இலங்கை மத்திய வங்கி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

நிதிப்பாய்ச்சல் தொடர்பாகத் தொடர்ந்து ஆராய்வதுடன், தேவையேற்படின் கட்டுப்படுத்துவதற்கான கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுப்பதற்கு எண்ணியுள்ளதாகவும் மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கடனுக்கான கேள்வியை தீர்மானிப்பதற்கு தாக்கம் செலுத்தும் கொள்கை வட்டி வீதத்தை கடந்த நான்கு மாதங்களுக்குள் மாற்றமடையாமல் தாழ்ந்த மட்டத்திலேயே வைத்திருப்பதற்கு இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை எடுத்திருந்தது.

இதேவேளை கடந்த ஆறாம் திகதி கூடிய நிதிச் சபை எதிர்வரும் மாதத்திற்கான கொள்கை வட்டி வீதத்தை மாற்றமடையாமல் வைத்திருப்பதற்குத் தீர்மானித்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# ராஜதந்திரப் பதவிகளுக்கு இராணுவ அதிகாரிகள்; நியமனம் தவறில்லை என்கிறார் அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

இராணுவ அதிகாரிகளை ராஜதந்திரப் பதவிகளுக்கு நியமிப்பதில் தவறில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பிரிஸ் தெரிவித்துள்ளார். மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா போன்றவர்கள் ராஜதந்திர சேவையிலும் காத்திரமான சேவையாற்றியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அனுபவமற்ற நபர்களை தூதுவர் மற்றும் உயர்ஸ்தானிகர் பதவிகளுக்கு நியமிப்பதனால் குழப்ப நிலைமை ஏற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க குற்றம் சுமத்தியிருந்தார். ராஜதந்திர சேவையில் இவ்வாறு அனுபவமற்றவர்களை இணைத்துக் கொள்வதனால் நாட்டின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அவரது குற்றச்சாட்டுக்களை மறுக்கும் வகையில் அமைச்சர் பீரிஸ் இதனைக் குறிப்பிட்டுள்ளார். வெளிநாடுகளில் தூதுவர் பதவி வகித்த சில முன்னாள் படையதிகாரிகளின் உதவியுடன் புலிகளின் பல செயற்பாட்டார்களைக்



கைது செய்யப்பட்டனர்.

மேலும் அணிசேரா நாடுகளைச் சேர்ந்த பல நாடுகள் ஐக்கிய நாடுகள் நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள அவர், அதில் 22 நாடுகள் அடங்குவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின மனித உரிமை ஆணைக்குழுவினால் இலங்கைக்கு எதிராக முன்வைக்கும் குற்றச்சாட்டுகளைத் தோற்கடிக்கும் இயலுமை இருக்கின்றது.

இதனால் ஐக்கிய நாடுகள் நிபுணர்கள் குழுவின் அறிக்கையை மனித உரிமை ஆணைக்குழுவின் பேரவையில் சமர்ப்பிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வலிகாமம் வலயப் பாடசாலைகளின் சமூக, விஞ்ஞானப் போட்டி முடிவுகள்

(இணுவில்)

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தினால் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட சமூக, விஞ்ஞானப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர் விபரங்களின் தொடர்ச்சி வருமாறு-

**பிரிவு - 2 , தரம் - 12, 13**

ம.பிரதீபன் - இணுவில் இந்துக் கல்லூரி, கே.பானுஜா - நவாலி ம.வி, த.தமிழினி - நவாலி ம.வி.

**பிரிவு - 3, தரம் - 6**

த.திருக்குமரன்-வட்டு.இந்துக் கல்லூரி, யே.எமரன்சியா - இளவாலை மெய்கண்டான் ம.வி, உ.தர்சன் - அராலி இந்துக் கல்லூரி.

**தரம் - 7**

சு.சுஜீபன்-மல்லாகம் ம.வி, சி.சிவதரன் - யா.யூனியன் கல்லூரி, பி.சோமபாலன் - வட்டு.இந்துக் கல்லூரி.

**தரம் - 8**

ச.அனுாஜன்-ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாடசாலை, சி.தர்சிகன் - மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை, ர.லோகிதா - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

**தரம் - 9**

க.சுலோசனா - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, நோ.ஜஸ்ரீனா - இளவாலை கன்னியர்மட ம.வி, க.தன்சிகா-இளவாலை கன்னியர்மட ம.வி.

**தரம் - 10**

ம.நிரூசன்-யூனியன் கல்லூரி, ம.சங்கவி-வட்டு.இந்துக் கல்லூரி, கு.அபிராமி - பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.

**தரம் - 11**

ம.கோகுலசாயி -யூனியன் கல்லூரி, நா.சிவஞானச்செல்வன் - யூனியன் கல்லூரி, ம.டக்ஸ்ஸன் - மல்லாகம் ம.வி,

**தரம் - 12, 13**

பா.மோகன்ராஜ் - மானிப்பாய் இந்துக் கல்லூரி, யே.அன்ரன் பிலிப்பன்தா - இளவாலை ஹென்றியரசர் கல்லூரி, த.துஸ்யந்தன் - வட்டு.இந்துக் கல்லூரி.

**பிரிவு - 4, தரம் - 6**

த.ரேணுஜன் - தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, வி.அருண்பிரகாஸ் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, இ.நித்தியாயினி - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

**தரம் - 7**

சி.ஜெயதரன் - மகாஜனக் கல்லூரி, க.அபர்ணா-சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, ஜெ.ஜனனி - மானிப்பாய் மகளிர் கல்லூரி.

**தரம் - 8**

கே.கவுணியன் - அருணோதயாக் கல்லூரி, இ.இரஜிவர்ணன் - மகாஜனக் கல்லூரி, த.கேசிதா - உடுவில் மகளிர் கல்லூரி.

**தரம் - 9**

அ.அமிர்தவர்சினி - மானிப்பாய் மகளிர் கல்லூரி, பு.ஐங்கரன் - விக்ரோறியாக் கல்லூரி, நா.ரனியா - மானிப்பாய் மகளிர் கல்லூரி.

**தரம் - 10**

கி.நவநீதா - மானிப்பாய் மகளிர் கல்லூரி, கி.விஷ்ணுகா - மகாஜனக் கல்லூரி, இ.நிஷானா - உடுவில் மகளிர் கல்லூரி.

**தரம் - 11**

பா.பாலஜீவன் - இணுவில் மத்திய கல்லூரி, கே.கௌசிகன் - மகாஜனக் கல்லூரி, சோ.வனஜா - மகாஜனக் கல்லூரி.

**தரம் - 12, 13**

இ.நிஜானா - மானிப்பாய் மகளிர் கல்லூரி, த.தனுசியா - மானிப்பாய் மகளிர் கல்லூரி, ச.வேணிலன் - மகாஜனக் கல்லூரி. (06)

## டெங்குக் காய்ச்சலால் ஐந்து பேர் உயிரிழப்பு

(கொழும்பு)


ஒருவார காலத்திற்குள் டெங்குக் காயச்சலால் 900இற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை, ஐந்து பேர் உயிரழந்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது.

இந்த வருடத்தின் இதுவரையான காலபபகுதிக்குள் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 82பேர் உயிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்பு பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் குறித்த காலப்பகுதிக்குள் 11 ஆயிரத்து 110 பேர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் நான்காயிரத்து 331 பேர் கொழும்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆறு மாத காலப்பகுதியில், கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 31 பேர் டெங்குக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# "மரம் போல்" கால்கள்



எத்தனையோ விதமான விசித்திர மனிதர்களைப் பார்த்தவர்கள் நாங்கள். இந்தப் படத்தில் இன்று பார்க்கப்போகும் மனிதனும் சற்று வித்தியாசமாகப் பாதிப்படைந்த ஒரு விசித்திர மனிதர்தான். சென்சொங்தயோ என்றழைக்கப்படும் இந்த நபர் தனது வலது காலில் தூக்க முடியாத சுமையாக சதையை சுமக்கின்றார். அதாவது இவரது வலது கால் முற்றாக இயற்கைக்கு முரணான முறையில் அபரீத வளரச்சியைக் கொண்டு அமைந்துள்ளது.

ஒரு யானையின் உடலைப்போன்று பருத்துக்காணப்படுகிறது இவரின் வலது கால். கிட்டத்தட்ட இடது காலை விட இவரது வலது கால் 150 பவுண்டுகள் எடை அதிகமாகக் காணப்படுகிறது. இதனால் எங்கும் எழும்பி நடமாட முடியாத இக்கட்டான நிலைக்கு இவர் தள்ளப்பட்டுள்ளார். இவருக்கு சிறுவயதில் இருந்து வலது காலில் கொஞ்சம் கொஞ்சமாக சதை வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது.

ஒரு சில ஆண்டுகளின் பின்னரே இவர் முற்றாக இதற்கு பாதிக்கப்பட்டுள்ளார். இவருடைய காலைப்பார்க்கும் போது கிட்டத்தட்ட ஒரு பெரிய மரத்தின் அடிப்பகுதியைப்போலவே காணப்படுகின்றது.



# சீனாவில் சைவத் திருவிழா

ஆண்டுதோறும் சீன நாள்காட்டியின் படி ஒன்பதாவது மாதம் நடைபெறும் இந்த விழா சைவத்திருவிழா என்றழைக்கப்படுகிறது. இந்த திருவிழா நடக்கும் போது 10 நாட்கள் கடுமையான சைவ விரதம் கடைப்பிடிக்கப்படுகிறது. 1825 ஆம் ஆண்டு முதல் இந்த திருவிழா கொண்டாடப்படுகிறது.



# தேவையில்லை சாவி

இந்தச் சாவியை எங்கே வைத்தேனோ தெரியேல'' சாவியை தொலைத்துவிட்டு அல்லது வைத்த இடத்தை மறந்துவிட்டு அவஸ்தைபடுபவர்கள் பலர். வாழ்க்கையில் பல நேரங்களில் டென்ஷனை அதிகரிக்கச்செய்யும் விஷயங்களில் இதுவும் ஒன்று. சைக்கிள், வீடு, பீரோ என ஏதாவது ஒரு சாவி மிஸ் ஆகிக்கொண்டே இருக்கும். இப்படிப் பட்டவர்களின் பீ.பி.யைக் குறைக்க இன்றைய விஞ்ஞான உலகம் கண்டுபிடித்துள்ள புதுமை சாதனம் ஸ்மார்ட் செல்போன்.

இதுபற்றி ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ள தகவல்கள்: இன்றைய நவீன உலகில் செல்போன் பயன்பாடு இன்றியமையாததாக ஆகிவிட்டது. இதன் பலனை முழுமையாக அனுபவிக்கும் வகையில் தினம் தினம் புதுப்புது வசதிகளுடன் செல்போன்கள் அறிமுகமாகி வருகின்றன. எல்லாவற்றுக்கும் செல்போனையே பயன்படுத்தும் நிலை வந்துவிட்டது. அந்த வரிசையில் அறிமுகமாக இருப்பதுதான் மேம்படுத்தப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய ஸ்மார்ட் போன்கள். இதில் சாவி வசதியும் செய்யப்பட்டுள்ளது.

வீடு, அலுவலக பூட்டுகளை மட்டுமின்றி கராஜ்கள், கார் கதவுகளையும் இதன் மூலம் எளிதாக திறக்கலாம். இந்த முறையில் பூட்டை திறப்பது எப்படி... கதவுக்கு அருகில் ஒரு சிறிய எலக்ரானிக் பேட் பொருத்தப்படும். ஸ்மார்ட் போனில் இதன் கட்டுப்பாடு இருக்கும். ரிமோட் கன்ட்ரோல் முறையில் இதை ஆபரேட் செய்து குறிப்பிட்ட பகுதியை எளிதாக திறக்கவும், பூட்டவும் முடியும். சுவிஸ் இராணுவத்தில் இந்த முறையில் செய்யப்படும் எலக்ட்ரானிக் கத்திகள்தான் பயன்பாட்டில் உள்ளன. போனில் இருந்து அனுப்பப்படும் ரிமோட் சமிக்ஞைகள், வயர்லெஸ் ரேடியோ சிக்னல்கள் மூலமாக இன்டர்நெட் மற்றும் கன்வர்ட்டர்கள் உதவியுடன் திறக்க வேண்டிய பகுதியில் உள்ள எலக்ரோனிக் பேடுக்கு செல்லும். சரியான சமிக்ஞையை ஏற்று நொடிப பொழுதில் கதவு திறக்கும். ரிமோட் வசதியுடன் அறிமுக மாக உள்ள ஸ்மார்ட் போன்கள், ஏராள மானவர்களின் எதிர் பார்ப்பை பூர்த்தி செய்யும் என்ற நம்பிக்கை வலுத்து வருகிறது. பூட்டு தயாரிக்கும் பிரபல நிறுவன மும் செல்போன் நிறுவன மும் இணைந்து அறிமுகப்படுத்த உள்ள இந்த ஸ்மார்ட் போன், விரைவில் விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மறதிப் பேர்வழிகள் சாவியைப் போல, செல்போனையும் தொலைத்துவிட்டால் அதற்கு யாரும் பொறுப்பாக முடியாது.





# வினோத மனிதன்

ஜேர்மனைச் சேர்ந்த ohan Lorbeer என்பவர் வீதிகளில் நடத்தும் வித்தை மிகவும் பிரபலமாகி வருகிறது.

ohan Lorbeer வித்தையின் ரகசியம் என்ன என்றால் சுவரில் தனது கையை வைக்காமல் செயற்கைக் கையை வைத்துக் கொண்டிருக்கிறார்.

இவரது உண்மையான கை ஆடைக்குள்ளே உள்ளது.



## கேலிச்சித்திர வீடியோக்களை உருவாக்க

அனைவரையும் கவரும் வகையில் கேலிச்சித்திர வீடியோக்களை உருவாக்கவும் அவற்றை AVI வடிவத்தில் சேமித்துக் கொள்ளவும் ஒரு மென்பொருள் உதவி செய்கிறது. இதன் பெயர் WEB CARTOON MAKER ஆகும். இந்த மென்பொருளைப் பயன்படுத்தி கேலிச்சித்திர வீடியோக்களை உருவாக்கிக் கொள்ள முடியும். மிக நீண்ட மற்றும் குறுகிய திரைப்படங்கள் மற்றும் வீடியோக்களை இந்த மென்பொருளை பயன்படுத்தி உருவாக்கலாம். அத்துடன் வடிவமைக்கப்பட்ட வீடியோக்களுக்கு ஒலி வடிவம் கொடுக்க முடியும். ஒன்லைனிலும் வடிவமைக்க முடியும். இது விண்டோஸ் இயங்கு தளத்தில் செயற்படக்கூடியது.

தரவிறக்க சுட்டி:-
http://www.webcartoonmaker.com/index.php/download-desk-top-application

## கூகுளின் புதிய பயனுள்ள இணையத்தளம்

இணையத்தில் கூகுள் நிறைய வசதிகளை வாசகர்களுக்கு தருகிறது. பிளாக்கர், யூடியூப், ஜிமெயில், மேப் என கூகுளின் சேவை விரிகிறது. இந்த சேவைகள் அனைத்தையும் கூகுள் வாசகர்களுக்கு இலவசமாக வழங்கி உள்ளது. இந்த வரிசையில் கூகுள் மேலும் ஒரு வசதியை அனைவருக்கும் வழங்கி உள்ளது. அது தான் What do you Love? என்பது.

இந்த தளம் மூலம் ஒரே நேரத்தில் கூகுளின் அனைத்து தளங்களிலும் தேடும் வசதி. இதனால் நாம் ஒவ்வொரு தளத்திலும் சென்று தனித்தனியாக தேடாமல் ஒரே இடத்தில் அனைத்து தளங்களிலும் தேடி வீணாகும் நம் நேரத்தை மிச்சமாக்கலாம். இந்த தளத்திற்கு சென்று நீங்கள் தேட விரும்பும் ஒரு குறிப்பிட்ட வார்த்தை நிரப்பி கீபோர்ட்டில் என்டர் கொடுத்தால் போதும். அனைத்து கூகுள் தளங்களிலும் தேடல் முடிவு வந்திருக்கும்.

அதில் உங்களுக்கு தேவையானதை கிளிக் செய்து சென்றால் அந்த தளத்தில் தேடல் முடிவு ஓபன் ஆகும். இப்படி ஒரே நேரத்தில் கூகுளின் Image, Map, youtube, Gmail, Alert இப்படி பல தளங்களிலும் தேடுதல் முடிவை கொடுக்கும். இதில் கூகுளின் பெரும்பாலான தளங்கள் வரும். இன்னும் பல தளங்கள் சேர்க்கப்படும் என்று கூகுள் அறிவித்துள்ளது.

இணையத்தள முகவரி:- http://www.wdyl.com/#


கணினி மூலை

# இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு இந்திய அரசு உதவவேண்டும்

## கம்யூனிஸ்ட் ராஜா கோரிக்கை

(சென்னை)

**இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நேற்றுமுன்தினம் இலங்கைத் தமிழர் ஒருமைப்பாட்டு நாளாக நாடுதழுவிய அளவில் கடைப்பிடிக்க இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அழைப்பு விடுத்திருந்தது.**



இதையொட்டி இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் டில்லி ஜந்தர் மந்தரில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்திய கம்யூனிஸ்ட் பொதுச செயலர் ஏ.பி. பரதன், நாடாளுமன்ற உறுப்பினர் பி.லிங்கம், துணைப் பொதுச் செயலர் சுதாகர் ரெட்டி, துணைச் செயலர் அமர்ஜித் கௌிர், டில்லி மாநில செயலர் தினேஷ்வர்னேய் உட்பட பலர் பங்கேற்றனர். அ.தி.மு.க.வின ரும் இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியத் தலைவர் டி. ராஜா பேசியதாவது:

இந்தியாவின் மிக நெருங்கிய அண்டை நாடான இலங்கையில் வசிக்கும் தமிழ் மக்களுக்கு ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. அரசியல், ஜனநாயக உரிமைகள் கிடைக்கப்பெறவும், சிங்கள மக்களைப் போல தமிழர்களும் சரி சமமாக எல்லா உரிமைகளும் பெறவும் கடந்த 50 ஆண்டுகளாக நீண்ட போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அடுத்தடுத்து இலங்கையை ஆண்ட அரசுகள், தமிழர்கள் கோரிய உரிமைகளை வழங்காமல், வஞ்சகம் செய்தன. இது ஆயுதப் போராட்டத்துக்கு வழி வகுத்தது. பின்னர் நடந்த உச்சகட்ட போரில் சர்வதேச சட்டம், நெறிமுறைகளை மதிக்காமல் கொத்துக் குண்டுகளை வீசி 40 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் கொல்லப்பட்டனர். இதற்கான வீடியோ ஆதாரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

உலக வரலாற்றில் வேறெங்கும் நடக்காத போர்க்குற்றங்கள் இலங்கையில் நடந்தேறியுள்ளன. கடந்த 2009ஆம் ஆண்டே போர் முடிவுக்கு வந்துவிட்டது என்று அறிவிக்கப்பட்டாலும், இன்றுவரை லட்சக்கணக்கான தமிழ் மக்கள் முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளனர். இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியாக தீர்வுகாண வேண்டும். இதற்கு இந்தியா உதவிட வேண்டும்.

தமிழக சட்டப் பேரவையில் ஜுன் 7 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட இலங்கை குறித்தான தீர்மானங்களை மத்திய அரசு பரிசீலனை செய்ய வேண்டும். இது குறித்து நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரில் விவாதத்துக்கு வலியுறுத்தப்படும் என்றார்.

# வறுமையில் வாடுவோர் தொகை இந்தியாவில் குறைவடைந்துள்ளது

## ஐக்கிய நாடுகள் சபை அறிவிப்பு

(ஜெனீவா)

இந்தியாவில் வறுமையில் இருப்பவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஐ.நா கடந்த வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கு ஆசிய நாடுகளில் முக்கியமாக சீனாவிலும், இந்தியாவிலும் வறுமை வேகமாக குறைந்து வருகிறது. 2015ஆம் ஆண்டுக்குள் சீனாவில் வறுமையில் இருப்பவர்களின் எண்ணிக்கை 5 சதவீதமாகக் குறைந்து விடும்.

சர்வதேச அளவில் வறுமையில் இருப்பவர்களின் எண்ணிக்கை வேகமாக குறைந்து வருவதற்கு இந்தியாவும், சீனாவும் முக்கியக் காரணம். ஏனெனில் மக்கள்தொகை அதிகமுள்ள இந்த இருநாடுகளிலும் வறுமையில் இருப்பவர்கள் ஏராளமானோர் உள்ளனர். இங்கு வறுமை குறைவதன் மூலம் சர்வதேச அளவில் வறுமையில் இருப்பவர்களின் எண்ணிக்கை வேகமாகக் குறைந்து வருகிறது.

1990ஆம் ஆண்டு கணக்கெடுப்புப்படி இந்தியாவிலும், சீனாவிலும் 51 சதவீதம் பேர் வறுமையின் பிடியில் சிக்கியிருந்தனர். 2015 இல் இந்த எண்ணிக்கை 22 சதவீதமாகக் குறையும்.1990க்கும் 2005 ஆம் ஆண்டுக்கும் இடையே இந்தியா, சீனாவில் இருந்து 45.5 கோடி பேர் வறுமையில் இருந்து மீண்டுள்ளனர். 2015 இல் மேலும் 32 கோடி பேர் வறுமை நிலையில் இருந்து முன்னேறுவார்கள்.

பசி, பட்டினி, குழந்தைகள் இறப்பு விகிதம், ஊட்டச்சத்து பற்றாக்குறை ஆகியவை இந்தியாவில் குறைந்து வருகிறது. 2008-09 இல் சர்வதேச பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது வறுமை ஒழிப்பு நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. 2015 இல் சர்வதேச அளவில் வறுமையில் இருப்பவர்களின் எண்ணிக்கை 15 சதவீதத்துக்கு கீழ் குறைந்து விடும். ஆனால் 23 சதவீதம் என்பதே இலக்காக நிர்ணயிக் கப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி பலமானதாக உள்ளதாம்

## நிதியமைச்சர் பிரணாப்முகர்ஜி கூறுகிறார்



(சென்னை)

காங்கிரஸ் கட்சிக்கும் தி.மு.கவுக்கும் இடையேயான கூட்டணி பலமாகவே உள்ளதாக நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை மாற்றத்தில் அமைச்சர் பதவிகளை வழங்குவது தொடர்பாக தி.மு.க தலைவர் கருணாநிதியை நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி சென்னையில் நேற்றுச் சந்தித்து கலந்துரையாடினார். இச்சந்திப்பை அடுத்தே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். இந்தச் சந்திப்பின் போது மத்திய அமைச்சர்களின் நாராயணாசாமி, தங்கவேலு முன்னாள் அமைச்சர்களான துரைமுருகன், பொன்முடி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஆயினும் அமைச்சர்கள் நியமனம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டவிடயங்கள் விரிவாக அறிவிக்கப்படவில்லை. ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகாரத்தில் ராசா, கனிமொழி ஆகியோரைத் தொடர்ந்து தயாநிதி மாறனும் சிக்கியுள்ளார். இதனால், அவர் மத்திய அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துள்ளார். ஊழல் குற்றச்சாட்டிற்காக இரண்டு அமைச்சர்கள் அதுவும் தி.மு.க. என்ற ஒரே கட்சியில் குறுகிய கால இடைவெளிக்குள் ராஜினாமா செய்திருப்பது, அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை கிளப்பியுள்ளது. இந்நிலையில் இச்சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைக்கின்றது.

# அமெரிக்க வெளியுறவுச் செயலர் இம்மாதம் இந்தியா வரவுள்ளார்

## சென்னைக்கும் செல்லத்திட்டம்

(சென்னை)

அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளின்டன் இம்மாதம் இந்தியா வருகிறார் இந்திய அமெரிக்கா இடையே வெளியுறவுத்துறை அமைச்சர்களிடையேயான பேச்சு வார்த்தை வரும் 19 ஆம் திகதி டில்லியில் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் பங்கேற்பதற்காக இந்தியா வரும் அமெரிகக வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் மூன்று நாட்கள் இந்தியாவில் தங்குகிறார்.

அமெரிக்க வெளிறவுத்துறை அமைச்சர் ஒருவர் சென்னைக்குச் செல்லவது இதுவே முதல் முறையாகும் கடந்த சில ஆண்டுகளாக தொழில்துறை முதலீடு மற்றும் வர்த்தக துறையின் மையமாக சென்னை வளர்ந்து வருகிறது.

சென்னை பயணத்தின் போது போர்டு கார் தொழிற்சாலையைச் சுற்றிப் பார்க்கும் ஹிலாரி கிளின்டன், தொழில் அதிபர்களை சந்திக்க திட்டமிட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகி உள்ளன.

# மருத்துவ ரீதியிலான படுக்கை வழங்க கனிமொழி கோரிக்கை

(சென்னை)

கழுத்து மற்றும் தோள்பட்டை வலிகளைப் போக்கிக் கொள்வதற்காக மருத்துவரீதியிலான படுக்கை, தலையணை வழங்க வேண்டும் என சிறப்பு நீதிமன்றத்தில் கனிமொழி மனு தாக்கல் செய்துள்ளார். சிறை விதிகளுக்குட்பட்டு அவரது கோரிக்கையை பரிசீலிக்குமாறு சிறப்பு நீதிமன்ற நீதிபதி சிறை அதிகாரிகளுக்கு நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்

2ஜி அலைக்கற்றை வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்ட கனிமொழி தற்போது திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.





**தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்**

ஒன்பதாவது அகவையில்

பெயர்: கா. நந்தாயினி
முகவரி: உடுவில் வீதி, மானிப்பாய்.



10.07.2011

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

**வாழ்க வளமுடன்**

சிறாரின் பெயர் : ..............................
முகவரி : ..............................
பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. .............................. பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


# ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தமிழின் குறியீடு



பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் ஈழத்துக்கும் தமிழகத்துக்கும் அப்பாலும் சென்று உலக அரங்கில் தமிழின் குறியீடாக நிலை பெற்றுள்ளார்.

தமிழ் கூறும் நல்லுலகில் புலமையாளராக, ஆய்வாளராக, விமர்சகராக, சிந்தனையாளராகப் பன்முகத்தன்மை கொண்ட ஆளுமையாக மிளிர்ந்தவர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள். தமிழ், தமிழர் பற்றிய சமூக வரலாற்றுப் பண்பாட்டுத் தேடுகையில் தனது ஆற்றல்களையும் அறிவுத் திறன்களையும் முழுமையாகக் குவியப்படுத்திச் செயற்படுத்திவந்த இவர், 20ஆம் நூற்றாண்டின் தமிழியல் ஆய்வுப் போக்கைத் - திசை முகப்படுத்தும் பேராளுமையாக விளங்கி வந்துள்ளார்.

தமிழ்ச் சமூகத்தில் நிலவிய சமவீனங்களின் பாதிப்பால் தனது இளம்பராயத்தில் பொதுவுடைமைக் கருத்துக்களின்பால் ஈர்க்கப்பட்ட பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் இதன் காரணமாக எதனையும் மார்க்ஸியக் கண்ணோட்டத்துடன் அணுகும் விஞ்ஞானபூர்வ மனப்பாங்கைப் பெற்றிருந்தார். ஆய்வுகளைத் தட்டையாக அல்லாமல் சமூகவியல், மொழியியல், பொருளியல், வரலாறு, இலக்கியம் என்று பல துறைகளையும் இணைத்துப் பல்துறைச் சங்கம ஆய்வாக மேற்கொண்டு வந்தார்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் அவரது ஆங்கிலப் புலமை காரணமாகப் பிறமொழிகளின் சிந்தனை வளர்ச்சிப் போக்குகளை உள்வாங்கித் தமிழுக்கு வளம் சேர்த்து வந்தார். தமிழியல் ஆய்வுக்கு இவர் திறந்துவிட்ட வாசல்கள் அதிகம். தமிழ்ச் சொற்களஞ்சியத்துக்கு இவர் பிரசவித்துத் தந்த கலைச் சொற்கள் பல்லாயிரம். இவையே பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களை ஈழத்துக்கும் தமிழகத்துக்கும் அப்பால் கொண்டு சென்று உலக அரங்கில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தமிழின் குறியீடாக நிலைபெறச் செய்துள்ளது.

சூழலியலாளர்- பொ.ஐங்கரநேசன்

# கொங்கோவில் மோசமான வானிலை விமான விபத்தில் 90 பேர் மரணம்

(கொங்கோ)

கொங்கோ நாட்டில் ஏற்பட்ட மோசமான காலநிலை காரணமாக உள்ளூர் சேவைகளில் ஈடுபட்டிருந்த விமானம் ஒன்று தரையிறங்கும்போது விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 90 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் கின்சாகா மற்றும் கிசான்கனி நகருக்கு இடையே சேவையில் ஈடுபட்ட ஹேவா போரா என்ற விமானமே விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விமானத்தில் சுமார் 127 பயணிகள் மற்றும் விமான ஊழியர்கள் பயணம் செய்தனர். இந்த விமானம் கிசான்கனி அருகே சென்று கொண்டிருந்த போது மோசமான வானிலை காரணமாக விபத்திற்குள்ளான தில் 72 பேர் வரை பலியாயினர்.

மீதமுள்ளவர்கள் உயிர் பிழைத்திருக்க கூடும் என்று கொங்கோ விமான போக்குவரத்து நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். விமான போக்குவரத்தல் மோசமான பராமரிப்பு கொண்ட நாடு கொங்கோ என்ற குற்றச்சாட்டும் பரவலாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# ஹிட்லரின் குடியுரிமை ஆஸ்திரியாவில் பறிப்பு

(நைஜீரியா)

இரண்டாம் உலகப் போர் முடிந்து 60 ஆண்டுகளின் பின்னர் ஜேர்மன் நாஜிப்படைகளின் தலைவர் ஹிட்லரின் குடியுரிமை அவர் பிறந்த நாடான ஆஸ்திரியாவில் பறிக்கப்பட்டுள்ளது.

அடால்ப் ஹிட்லர் ஆஸ்திரியாவின் பிரானு அம் இன் நகரில் 1889 ஆம் ஆண்டு பிறந்தார். அவரது குடியுரிமை நீககம் குறித்து வியாழக்கிழமை இரவு முடிவு அறிவிக்கப்பட்டது.

ஹிட்லரின் குடியுரிமை நீக்குவது தொடர்பாக நடந்த வாக்கெடுப்பில் ஏகமனதாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. எனவே அவரது பெயர் குடியுரமை பட்டியலில்` இருந்து நீக்கப படுகிறது என மேயர் ஜோகன்னஸ் வெய்ட் பாச்சர் தெரிவித்தார்.



கடந்த 1938 ஆம் ஆண்டு முதல் 1945 ஆம் ஆண்டு வரையில் ஹிட்லர் பற்றிய ஆவணங்கள் நகர குறிப்புகளில காணப்படவில்லை.

ஆஸ்திரியாவைச் சேர்ந்த ஹிட்லர் 7 ஆண்டுகள் எந்த நாட்டு குடியுரிமையும் பெறாதவராக இருந்தார். ஆனால் 1932 ஆம் ஆண்டு ஜேர்மன் குடியுரிமை வழங்கியது. கடந்த 1938 ஆம் ஆண்டு ஆஸ்திரியாவை ஜேர்மனி சேர்த்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# பாகிஸ்தானுடனான அமெரிக்க உறவு துண்டிக்கப்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது

(வொஷிங்டன்)

பாக்கிஸ்தானுடனான அமெரிக்க உறவு தற்போது சுமுகமானதாக இல்லை. இதேபோன்றதொரு நிலை 1990 களிலும் காணப்பட்டது.

எனவே பாகிஸ்தானுடனான உறவு முற்றிலுமாக துண்டிக்கப்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க கூட்டுப் படைகளின் தளபதி அட்மிரல் மைக்முல்லென் தெரிவித்துள்ளார்.

வொஷிங்டனில் உள்ள இராணுவ தலைமையகமான பெண்டகனில் ஊடகவியலாளர்களைக் கடந்த வியாழக்கிழமை சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். பாகிஸ்தானைப் பொறுத்தமட்டில் வெளியிலிருந்து வரும் அச்சுறுத்தலாக ஆப்கானில் உள்ள பயங்கரவாதிகளைக் கருதவில்லை. மாறாக இந்தியாவைக் கண்டுதான் அந்த நாடு பெரிதும் கவலைப்படுகிறது. இதனால் இந்தியாவை நோக்கியே தனது முழுக் கவனத்தையும் செலுத்துகிறது.

இதன் காரணமாக பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையை பாகிஸ்தான் முழுமூச்சாக மேற்கொள்ள முடியவில்லை.

ஆப்கான் எல்லையில் ஹக்கானி பயங்கரவாத குழு, குயெட்டா ஷரா ஆகியன செயற்படுகின்றன. இவ்விரண்டு குழுக்களும் பாகிஸ்தானின் உள்நாட்டு கலவரத்துக்கு முக்கிய காரணமாக விளங்குகின்றன. இதனாலேயே வஜிரிஸ்தான், குயெட்டா பகுதியில் உள்ள குழுக்களைச் சமாளிக்க மிகுந்த போராட்டம் நடத்த வேண்டியுள்ளது. பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுத உதவி வழங்குவதாகக் கூறப்படுகிறது. ஆனால் அமெரிக்கா நிதி உதவியை மட்டும் தான் அளிக்கிறது. இத்தகைய உதவியை நிறுத்துவது குறித்து அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

எதிர்காலத்தில் எத்தகைய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். பாகிஸ்தானுடனான உறவு இப்போது சுமுகமாக இல்லை. இதேபோன்ற சூழல் தான் 1990 களில் ஏற்பட்டது. பாகிஸ்தானுடனான உறவு முற்றிலுமாக துண்டிக்கப்படுவதற்கான வாய்ப்பும் உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.



தெற்கு சூடான் எனும் புதிய நாடு நேற்றையதினம் உதயமானதை அடுத்து அந்நாட்டு மக்கள் வீதியில் இறங்கி தமது மகிழ்ச்சிப் பெருக்கை வெளிக்காட்டுகின்றனர்.

# பதிவிறக்கப் பெட்டகம்

**தா**ன் ஏத்துக்கிட்ட கருத்துக்கு விசுவாசமா நடக்கிறதோட யாரும் திருப்தியடையறதில்லை. தன்னால முடிஞ்சமட்டிலும் அந்தக் கருத்தை மத்தவங்களிடம் பிரச்சாரம் செய்கிறவங்களாகவும் ஒவ்வொருத்தரும் இருக்கிறோம். தனிமனுசனாகவோ ஒரு குழுவாகவோ ஒரு இனமாகவோ வர்க்கமாகவோ பிரிந்தும் சேர்ந்தும் இந்த பிரச்சாரம் நடக்குது. இந்த பிரச்சாரத்திற்கான கருவிகளில் ஒன்றுதான் ஊடகங்கள். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இன்டர்நெட், சினிமா, மேடை, கலை இலக்கியம் என்று ஊடகங்களோட வகைமைகள்னு விரித்து சொல்லலாம். ஏதோவொரு கருத்துக்கு ஒட்டுமொத்த சமூகத்தையும் ஒப்புக்கொள்ள வைக்கிறதுதான் இவையெல்லாத்துக்கும் நோக்கம். இந்த ஊடகங்கள் மக்களோட தொடர்பு வச்சிருக்கிறதே ஒரு குறிப்பிட்ட பிரச்சினையில தனக்கிருக்கிற கருத்தை சமூகத்தோட பொதுக்கருத்தா மாற்றணும்கிறதுக்காகத் தான்.

- ஆதவன் தீட்சண்யா.

**ஒ**ருவர் மக்களுடைய ஏதேனும் ஒரு எரியும் பிரச்சினையை வார்த்தைகளாக மாற்றிவிட்டால் அதன் மூலம் அந்தப் பிரச்சினைக்கோ அந்த மக்களுக்கோ என்ன நடக்கிறது என்று யாரும் யோசிப்பதாகத் தெரியவில்லை. உதாரணமாக ஈழத்துப் பிரச்சினையைப் பற்றித் தொடர்ந்து ஓவியம் வரையும் ஓர் ஓவியரின் முகத்தில் சுடர்விடும் தியாகத்தின் புனிதக் களைப்பை என்னால் ஒருபோதும் புரிந்துகொள்ள முடிந்ததில்லை.

- மனுஷ்ய புத்திரன.

**மீ**டியா மதத்திற்குப் பதிலீடாக உருவாகி வருகிறது. நவீன மனிதனுக்கு அவனுக்கு "அப்பாலான" நடப்புகள் பற்றிய செய்திகளைத் தொடர்ந்து அளிப்பதன் மூலம் ஒருவிதப் பாதுகாப்பு உணர்வை மீடியா ஏற்படுத்துகிறது. அன்றாட உழலுதலின் அற்பத்தனத்திலிருந்து மனிதனை விடுவித்துப் "பேருண்மை" யுடன் தொடர்பு கொண்டுள்ள மாயையை மீடியா ஏற்படுத்துகிறது. மீடியா மதத்தைப் பதிலீடு செய்வதால்தான் அது மரணத்தைப் பற்றி பெரும் கரிசனம் கொள்கிறது. கொலை, படுகொலை, விபத்து, பேரழிவு, போர் என மரணத்தின் எல்லாப் பரிமாணங்களையும் மதத்தைப் போலவே மீடியாவும் பிரதானப்படுத்துகிறது.

- ஜோன் கரே.

செப். 11 தாக்குதலுக்குப் பிறகு அமெரிக்காவில் பெரும் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டது. பங்குச் சந்தையில் எல்லாப் பங்குகளின் விலைகளும் சரிந்தன. ஆயுதம் தயாரிக்கும் கம்பனிகளின் பங்குகளும் மீடியா கம்பனிகளின் பங்குகளும் மட்டும் உயர்ந்தன. சமூகத்தின் கேடுகாலம் மீடியாவின் பொற்காலம். அதேபோல சமூகத்தில் சிவில் யுத்தம், போர், மதக் கலவரம், சாதிக் கலவரம் போன்றவை இல்லாத சுபிட்சமான நிலை நிலவுமெனில் மீடியா பெரும் சரிவைச் சந்திக்கும். இலங்கையில் அமைதி உடன்படிக்கைக்குப் பிறகு நாளிதழ், இதழியல் விற்பனை கடுமையான சரிவைக் கண்டுள்ளது இதற்கு ஒரு நல்ல உதாரணம். அங்கு அமைதி நீடிப்பதில் மீடியாவின் பங்கு என்னவாக இருக்கும் என்பதை ஊகிக்கக் கற்பனை வளம் அவசியமில்லை.

- காலச்சுவடு கண்ணன.

**த**மிழில் வெளிவருகின்ற புத்தகங்களெல்லாம், அவை வாசிக்கப்பட வேண்டும் என்ற நோக்கம் மட்டுமே கொண்டிருப்பதாக நினைக்க வேண்டியதில்லை. சிலருக்கு, குலதெய்வத்திற்கு மொட்டை போடுவதும், காவல் தெய்வத்திற்கு தீச்சட்டி எடுப்பதும் போலத்தான் எழுதிய நூலை வெளியிட்டு விழா வைப்பதும் ஒரு சடங்கு சார்ந்த நிகழ்ச்சி. இன்னும் சிலருக்கு பணி உயர்வுக்கு உதவும் கூடுதல் சான்றிதழ். வேறு சிலருக்கு வாரிசுகள் தொழில்கல்வி பெற உதவும் கூடுதல் மதிப்பெண்கள் இதுபோன்ற பல காரணங்களாலும் தமிழன்னை அணிகலன்கள் பல பூண்டு ஆனந்த நர்த்தனம் புரிய வழியேற்படுகிறது.

- அ.ராமசாமி.

கருத்து வெளிப்பாட்டுக்கான சுதந்திரம் என்பது நாம் ஆதரிக்கும் கருத்துக்களுக்கான சுதந்திரம் மட்டுமல்ல. நம்மை அதிர்ச்சி அடையச் செய்யும் கருத்துக்களுக்கான சுதந்திரமும்கூட.

- நோம் சோம்ஸ்கி.

பத்திரிகைச் சுதந்திரத்தை விடப் பத்திரிகைகளிடமிருந்து சுதந்திரம்தான் இன்று மக்களுக்குத் தேவையாக இருக்கிறது.

- ஒஸ்வோல்ட் ஸ்பெங்லர்.

எனது சுதந்திரம்
அரசாலோ தனிநபராலோ
பறிக்கப்படுமெனில்
அது என் சுதந்திரம் இல்லை
அவர்களின் சுதந்திரம்தான்.

- ஆத்மாநாம்.

# மாகாணசபைகள் திறம்பட இயங்குவதற்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டியது எப்படி?

(1)
நிர்மலா சந்திரஹாசன் எல்.எல்.பி, எஸ்எல்.எம், பிஎச்.டி, சட்டத்தரணி

13 ஆவது திருத்தமாக இருக்க வேண்டுமா, 13 ஆவது திருதத்திலும் கூடியதாக இருக்க வேண்டுமா அல்லது 13 ஆவது திருத்தமே இல்லையா என தற்சமயம் நடை பெற்றுவரும் விவாதமானது, அந்த 13 ஆவது திருத்தம் 1987 இலிருநதே அரசியலமைப்பின் ஒரு பகுதியாகவும் மற்றும் 13 ஆவது திருத்தத்தின் கீழ் 1987 ஆம் ஆண்டின் மாகாணசபைகள் சட்டம் இல. 42 உடன் ஒன்றிணைநதுள்ளது என்கிற கருத்தை தவறாகக் கருதவைக்கிறது,

அத்துடன், மாகாணசபைகள் 1988 இலிருந்தே நிறுவப்பட்டு வடக்கு மகாணசபையைத் தவிர மற்றவை யாவும் இயங்கியும் வருகின்றன. அரசியலமைப்பு பிரிவுகளின்படி வட மாகாண சபையும் வெகு விரைவிலேயே நிறுவப்பட வேண்டியிருக்கும், ஏனெனில், அந்தப் பகுதியில் மோதல்கள் இரண்டு வருடங்களுக்கு முன்பே முடிவடைந்து விட்டன, எனவே அதை நிறுவுவதற்கு தாமதம் காட்டுவதற்கு எந்தக் காரணமும் கிடையாது.

இதுவரை விவாதிக்கப்படாமல் தங்கி நிற்கும் ஒரே கேள்வி எதுவெனில், ஏன் இதுவரை காலமும் அவற்றுக்கு நியாயமான அதிகாரப் பகிர்வு வழங்கப்படவில்லை என்பதும், மற்றும் அரசியலமைப்பு விதிகளை சிறப்பாகச் செயல்படுத்தி மாகாணசபைகள் மக்களுக்கு வழங்க வேண்டிய சேவைகளை எப்படி வழங்க வைக்கலாம் என்பதே தவிர, வெறும் வெள்ளை யானைகளைப்போல அவற்றை வைத்திருப்பது அல்ல.

பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் அதிகாரப் பகிர்வின் பிரதான கரு என்னவெனில், சகல அதிகாரங்களையும் மையப்படுத்தப்பட்ட அதிகாரத்துவத்தின் கையில் ஒப்படைக்காமல் அது மக்கள் தங்கள் வாழ்விடங்களில் தங்களைப் பாதிக்கும் விடயங்களைப் பற்றி தாங்களே அதிகம் அக்கறை கொள்ள அனுமதிப்பதாகும். அதற்கும் மேலாக, ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களுக்கு மாத்திரம் அல்லாது நாட்டின் சகல மக்களுக்கும் உரிய வகையில் அது வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இதன்படி இச் சபைகள் வெற்றிகரமாக இயங்கவில்லை. ஏனெனில், அவற்றிற்கான நிர்வாகத் திறமை வழங்கப்படாததால் அவற்றின் சட்டமியற்றுவதற்கான தகுதி பயன்படுத்தப்படுவதில்லை. மேலும் அவற்றின் நிதி நிலைப்புத் தன்மையிலும் குறைவு காணப்படுகிறது. அவற்றின் சட்டமியற்றும் தகுதி பற்றி முதலில் ஆராய்வோம்.

அரசியலமைப்பின் 9 ஆவது அடடவணை ஒரு மாகாணப் பட்டியல், ஒரு தொகுப்பு பட்டியல், ஒரு உடன் நிகழ்வு பட்டியல் என மூன்று பட்டியல்களாக அமைகிறது. அரசியலமைப்பின் உறுப்புரை 154 ஜி (1) ன் கீழ் மகாணசபையானது அது அமைந்திருக்கும் மாகாணத்துக்கான 1 ஆவது பட்டியலில் அமையப் பெற்ற சகல விடயங்களுக்குமான சட்டங்களை இயற்றுவதற்கான அதிகாரத்தைக் கொண்டிருக்கிறது. அந்தப் பட்டியலில் உட்படுவது, மாகாணப் பொருளாதார திட்டங்களைத் திட்டமிடுவது மற்றும் செயற்படுத்தல், உள்ளூராட்சி சபைகள், கூட்டுறவு சபைகள், சுகாதாரம், கிராம அபிவிருத்தி, காணி, சாலைப் பயணிகளின் போக்குவரத்துக் கட்டுப்பாடு, விவசாயம் போன்றவை.

காவல் மற்றும் பொது ஒழுங்கு, காணித் தீர்வு மற்றும் கல்வி என்பனவைகளும் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களே. மற்றும் அவைகள் பட்டியலில் உள்ள மூன்று இணைப்புகளில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. அது மிக விரிவான பட்டியலாகத் தெரிகிறது. மாகாணப் பட்டியலில் உள்ள விடயங்கள் சம்பந்தமாக நாடாளுமன்றத்தாலும் சட்டமியற்ற முடியும். அத்தகைய மசோதாவை மேற்கோள் காட்டி ஒரு சாதாரண பெரும்பான்மையை சபையில் பெறுவதின் மூலமாக ஒவ்வொரு மாகாணசபையும் அதற்கு சம்மதம் தெரிவிக்கலாம். மாறாக அதை நிறைவேற்றுவதற்கு இணக்கமில்லாத ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட சபைகள் இருக்குமாயின் அவை மூன்றிலிரண்டு பெரும்பான்மை மூலம் அதை நிராகரிக்கலாம்.

தொகுப்பு பட்டியலில் உள்ள விடயங்கள் மத்திய அரசாங்கத்துக்காக ஒதுக்கப்பட்டவை. அது உள்ளடக்கியிருப்பது பாதுகாப்பு, வெளியுறவு, துறைமுகங்கள் மற்றும் இறங்குதுறைகள், தேசிய போக்குவரத்து போன்றவை. ஸ்ரீலங்கா அரசியலமைப்பில் உள்ள அந்த தொகுப்பு பட்டியல் ஆரம்பமாவது சிறப்பு குறிப்பான 'சகல விடயங்களுக்குமான தேசிய கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள்' என்று. இந்தப் பிரிவின் நியாயமான விளக்கம் மாகாணப் பட்டியலில் உள்ள ஒரு விடயம் தொடர்பாக நாடாளுமன்றம் தனது தேசிய கொள்கையை கீழிறக்க முடியும், மற்றும் மாகாணசபை சட்டமியற்றும் பொழுது அதனைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றிருக்க வேண்டும்.

எப்படியாயினும், மத்திய அரசு தலையிட்டு மாகாணப் பட்டியலில் உள்ள விடயங்களைப் பொறுப்பேற்றுக்கொள்ள அனுமதிக்கும் வகையில் அது விளக்கப்பட்டுள்ளது. உதாரணத்துக்கு மாகாணசபை பட்டியலின் கீழுள்ள 8 ஆவது பிரிவை எடுத்துக்கொண்டால், மாகாணத்துக்குள்ளான சாலைப் போக்குவரத்து சேவைகள் கட்டுப்பாடுகள், மற்றும் பிரிவுகள் ஒரு மாகாணம் சம்பந்தப்பட்ட விடயம். இதன்படி முதலாவது மேல்மாகாண சபை போக்குவரத்து சேவைகள் தொடர்பான சட்டம் ஒன்றை இயற்றி மாகாண போக்குவரத்து அமைச்சர் அதை நடைமுறைப்படுத்துவதற்காக மூன்று பேருந்துகளை சீனாவிலிருந்து இறக்குமதி செய்திருந்தார்.

அந்தச் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டு ஒரு வாரத்திற்குள்ளாகவே, அவ்வாறான சேவையை நடததுவது தேசிய கொள்கையுடன் மோதலை ஏற்படுத்துகிறது என அறிவித்த அரசாங்கம், மாகாணசபை இயற்றிய சட்டம் பெறுமதியற்றது எனவும் அறிவித்தது. அநேக சந்தர்ப்பங்களில், மாகாண அதிகாரத்தின் கீழ்வரும் பாடசாலைகளையும் வைத்தியசாலைகளையும், அவைகள் தேசிய பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள் என அறிவித்து அரசாங்கம் அவைகளைக் கையேற்றுள்ளது. இதற்கும் மேலாக அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றாமல் ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள தேசிய கொள்கைகள் என அறிவித்தும் அமைச்சரவை முடிவுகள் மற்றும் அமைச்சகச் சுற்றறிக்கைகள் மூலமாக பல விடயங்களைக் கையேற்றுள்ளன.

அரசியலமைப்பு வழங்குவது ஒரு மாகாணசபை ஒரே விடயத்திற்கு முன்னைய விதிகளின்படி ஒரு சட்டத்தை இயற்றினால் அது நிலையற்றதாவதுடன், செயற்படாதபடி இடைநிறுத்தப்படுகிறது என்று. 1988 இல் மாகாணசபைகள் இயங்க ஆரம்பித்ததும் கண்டுபிடிக்கப்பட்டது, நடைமுறையிலுள்ள சுமார் 300 வரையான மாகாணத்தின் சட்டங்கள் தொடர்பான விடயங்கள் உடன் நிகழ்வு பட்டியலில் இடம் பெற்றிருப்பதை. இவை யாவும் மத்திய அரசாங்கத்திலுள்ள அமைச்சர்களின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பானவை.

இத்தகைய அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் மாகாணசபையின் அமைச்சர்களுக்கும் மற்றும் அதிகாரிகளுக்கும் மாற்றத்தக்க வகையில் இந்தச் சட்டங்களில் தேவையான திருத்தங்களை மாகாணசபைகள் செய்யவேண்டியிருந்தன. எப்படியாயினும் அத்தகைய சட்டங்களை உருவாக்குவதில் உள்ள நடைமுறைச் சிககல்களாக எழுந்தது என்னவெனில் உண்மையில் அத்தகைய சட்டங்களை வரைவதற்கு தேவையான தகுதியுடைய அரச சட்ட வரைவாளர்கள் மாகாணசபைகளிடம் இல்லாமலிருந்ததே. இந்தக் காரணங்களினால் அநேகமான முன்னைய சட்டங்களே தொடர்ந்தும் நடைமுறையிலிருந்ததுடன் இன்னமும் மத்திய அரசு அதன் அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் மாற்றப்படவேண்டிய விடயங்களில் தொடர்ந்தும் பயன்படுத்தி வருகிறது.

1989 இல் மாகாணசபைகள் (அதன் விளைவான ஒதுக்கீடுகள்) சட்டம் நிறைவேறியபோது அதில் வழங்கப்பட்டிருந்தது. மத்திய அரசின் கீழுள்ள அதிகாரிகளுக்கான சகல தொடர்புகளும் இப்போது மாகாணசபை பட்டியலின் கீழ் வரும் விடயங்களைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட மாகாண அதிகாரிகளுக்கு தொடர்புடையதாக பொருள் கொள்ள வேண்டும் என்று. எப்படியாயினும் இந்த சட்டம் ஒரு மாகாணச்சட்டம் மேற்கொள்ளப்படாவிட்டால் மத்திய அதிகாரிகள் விரும்பினால் தொடர்ந்தும் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தலாம் எனும் பொருள்படத் தக்கவகையில் பொருள் விளக்கம் செய்யப்பட்டது.

இதன் அடிப்படையில் உதாரணத்துக்கு மத்திய அரசு சப்பிரகமுவ மாகாணம் நிாவாகம் செய்து வந்த இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆதார வைத்தியசாலைகளை பொறுபபேற்றுக்கொண்டது. இதேபோல உள்ளூராட்சி அதிகாரிகள் மீதான மேற்பார்வை செய்யும் அதிகாரத்தை மத்திய அமைசசர் தொடர்ந்தும் பயன்படுத்தலாம். இந்த வழிகளில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் தொடர்ந்தும் மறைக்கப்பட்டு வருகின்றன.

இதற்கும் மேலாக மாகாண சபைகள் (அதன் விளைவான ஒதுக்கீடுகள்) சட்டம், உடனடி நிகழ்வு பட்டியலுக்குள் அடங்கியுள்ள விடயங்களை உள்ளடக்கியதாக இல்லை. எனவே இந்தப் பகுதிகள் உள்ளடங்கிய சுமார் 200 சட்டங்கள் ஏற்கனவே சொல்லியதுபோல சட்டங்களை இயற்றத் தகுதியான சட்டவரைஞர்கள் மாகாணசபைகளிடம் இல்லாதபடியால் மாற்றியமைக்க முடியாதுள்ளது.

மத்தியானது மாகாண சபைகளுக்கு மாதிரி சட்டங்களை தயாரித்து வழங்குவதன் மூலம் இந்தப் பிரச்சினைகளை ஒரு குறிப்பிட்ட எலலை வரை தீர்த்து வைக்க முடியும். ஆனால் மிக முக்கியமாக மத்திய அரசு தனது பிரயோகங்களை சுய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதுடன், மத்திய அமைச்சர்களும் அதிகாரிகளும் அதிகாரங்களைக் கைமாற விருப்பப்பட வேண்டும். மாகாணசபையானது மத்திய அரசிலுள்ள அதே அரசியற் கட்சியின் கட்டுப்பாட்டிலிருப்பின் அங்கு கூடுதலான ஒத்துழைப்பு வழங்கப்படுவதுடன், எதிர்க்கட்சியின் கட்டுப்பாட்டிலிருப்பின் மத்தி அதன் சகல செயற்பாடுகளிலும் தேசிய கொள்கையையும் அதேபோல மாகாண சபைகள் (அதன் விளைவான ஒதுக்கீடுகள்) சட்டத்துக்கு குறுகிய பொருள் விளக்கங்களையும் பிரயோகித்து, மாகாணப் பட்டியலில் உள்ள விடயங்களையும் தன்வசம் இழுத்து மேலாண்மை செலுத்தவும் முயற்சிக்கிறது.

மாகாணசபை முறை திறமையாகச் செயற்படுவதற்கு அதிகாரப் பகிர்வு வெளிப்படையாகவும் மற்றும் தெளிவின்மை சிறிதளவுகூட இல்லாததாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். அங்கு தேசியக் கொள்கை அல்லது தேசியத் தரங்கள் கீழிறக்கப்பட வேண்டியது அவசியம், அது மாகாணங்களின் ஈடுபாட்டுடன் கூடிய பங்களிப்பு முறையுடன் உள்ள உச்சக் கட்டமைப்புச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதன் மூலமாகச் செய்யப்பட வேண்டும். அத்தகைய கட்டமைப்புச் சட்டங்களை மாகாண சபைகள் சட்டவிதிகளை நிறைவேற்றுவதன் மூலமாக உறுதிப்படுத்த வேண்டியது அவசியம். 2006 இல் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் பெரும்பான்மை அறிக்கைகளின் பரிந்துரைகளில் இதுவும் ஒன்று.

மாகாணங்களின் நிறைவேற்று அதிகாரம் அதன் சட்டமியற்றும் அதிகாரங்கள் தொடர்பான விடயங்களில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. உறுப்புரை 154 சீ அதனுடன் இணைந்த 154 எப் என்பன அறியத் தருவது, இந்த அதிகாரங்கள் முதலமைச்சர் மற்றும் அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில் ஆளுநரால் நடைமுறைப் படுத்தப்படலாம் என்று. ஆளுனர் அதை நடைமுறைப்படுத்தும் தனது செயற்பாடுகளில், அவர் தனது தீர்மானத்தின்படி தனது நடவடிக்கை தேவைப்படும் எனக் கருதும் அத்தகைய சந்தர்ப்பங்களைத் தவிர மற்றவிதத்தில் அவர்களின் ஆலோசனைகளின்படியே நடக்க வேண்டும் என்பது கட்டாயமாகும்.

எனவே ஆளுநரின் பாத்திரம் வெஸ்ட்மினிஸ்டர் அரசியலமைப்பின் மாதிரியில் உள்ள அரசியலமைப்புத் தலைவரின் பங்கினையும், இந்திய மாநிலங்களிலுள்ள ஆளுனரின் நிலையையும் ஒத்ததாகவிருப்பதை நாங்கள் காணலாம். எவ்வாறாயினும் இது தெளிவாக விளக்கப்பட வேண்டியதுடன் அரசியலமைப்பு மரபுகளையும் அவதானிக்க வேண்டும். ஆளுனர் தனது தீர்மானங்களை பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் மிகச் சிலவே, மேலும் அது உருவாவதற்கான சந்தர்ப்பங்களாக அமைவது, அங்கு போதியளவு பெரும்பான்மை இல்லாவிட்டால் ஆளுனர் ஒரு முதலமைச்சரை நியமிக்க வேண்டும் அல்லது சபையைக் கலைக்க வேணடும்.

மேலும் அவர் தனது தீர்மானததை நடைமுறைப்படுத்தக்கூடியது, சபை ஒரு சட்டவிதியினை உருவாக்கி அதை ஆளுனரின் ஒப்புதலுக்காக அனுப்பும்போது அது தொடர்பாக ஒன்றில் அவர் வழக்கமான முறையின்படி தனது ஒப்புதலை அளிக்கலாம் அல்லது அதை மீள் கவனிப்புக்காகத் தான் கருதும் திருத்த ஆலோசனைகளுடனோ அல்லது அது இல்லாமலோ திருப்பி அனுப்பலாம். மீள்கவனிப்பின் பின்னரும் சபையானது எந்தவித திருத்தங்களும் இல்லாமல் அந்த மசோதாவை நிறைவேற்றுமாயின், ஆளுனர் தனது விவேகப்படி அதற்கு ஒப்புதல் வழங்கவேண்டும் அல்லது அது அரசியலமைப்புக்கு முரணானதாக உள்ளதா என்று தீர்மானிப்பதற்காக உச்ச நீதிமன்றின் கருத்தை ஒரு குறிப்பிட்ட காலமாகிய ஒருமாதத்துக்குள் அறிவதற்காக ஜனாதிபதியின் மேற்காட்டுதலுக்கு அனுப்புவதற்காக ஒதுக்கி வைக்கலாம். சில தருணங்களில் ஆளுனர்கள் சபைகள் நிறைவேற்றிய நிதிச் சட்டமூலங்களை குறிக்கப்பட்ட கால எல்லைக்கும் மேலாகத் தாமதப்படுத்துவதற்காக இந்தப் பிரிவினைப் பயன்படுத்துகிறார்கள்.

(தொடர்ச்சி நாளை)

# வடக்கில் கடற்தொழில் தடைகள் நீக்கம்

# அமைச்சர் டக்ளஸின் கோரிக்கைக்கு இணக்கம்

## யாழ்.நகரில் பஸில் ராஜபக்ஷ அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளிற்கிணங்க மீனவர்கள் வடபகுதிக் கடற்பரப்பில் எதுவித தடையுமின்றி சுதந்திரமாகக் கடற்தொழில் நடவடிக்கையில் ஈடுபட நேற்றைய தினம் முதல் அனுமதிக்கப்பட்டிருப்பதாகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்ற யாழ்.மாவட்ட தேசிய கடற்தொழில் மகா சம்மேளன அங்குரார்ப்பண நிகழவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

பருத்தித்துறை சக்கோட்டை உட்பட யாழ். குடாநாட்டில் இரண்டு மீன்பிடித்துறை முகங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், வடக்குக் கிழக்குப் பகுதிகளில் கடற்தொழில் சமாசங்களின் நிதி ஒதுக்கீட்டில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகவும் கடல் அட்டை வளர்ப்பு, நண்டு வளர்ப்பு, கடற்கரை யோரங்களில் கடற்தாவரங்களை வளற்பதற்கும் பொருளாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். முன்னதாக அகில இலங்கை ரீதியாக 19 ஆவது தேசிய கடற்தொழில் மகா சம்மேளனத்தைக் கடற்தொழில் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

# கிளிநொச்சி வைத்தியசாலையில் நோயாளர்கள் பெரும் சிரமம்

(கொழும்பு)

காணி மற்றும் குடும்பம் பிரச்சினைகள், காரணமாக சிறு மோதல்களில் ஈடுபட்டுக் காயங்களுடன் வருபவர்களை சிகிச்சை பெறுவதற்காக பொலிஸார் கிளிநொச்சி வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கின்றனர். இவர்கள் சிகிச்சை முடிந்ததும் சட்டவைத்திய அதிகாரியின் அனுமதியுடனேயே வெளியேற முடியும்.

இருப்பினும் அங்கு சட்டவைததிய அதிகாரி தொடர்ச்சியாகக் கடமையில் இல்லாமல் இருப்பதனால் நீண்ட நாட்கள் அவரின் அனுமதிக்காக நோயாளிகள் காத்திருக்கின்றனர்.

ஒரு சிறிய காயத்திற்குக் கூட நான்கு ஐந்து நாள் வைத்தியசாலையில் தங்கியிருக்கவேண்டிய நிலை இருப்பதாகக் நோயாளிகள் தெரிவிக்கின்றனர்.

# நெடுந்தீவில் மருத்துவ சேவை வெற்றிடங்கள் நிரப்ப ஏற்பாடு

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவு வைத்தியசாலையில் நெடுங்காலமாக நிலவிவரும் தாதியார் பற்றாக்குறை மிக விரைவில் நிவர்த்தி செய்யப்படும் என யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நெடுந்தீவுப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு சுகாதார சேவைகள் தொடர்பாக விளக்கமளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் நெடுந்தீவு வைத்தியசாலைக்கு இரண்டு நிரந்தர வைத்தியர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும் இரு மாதத்துக்குள் எம்.பீ.பீ.எஸ். தரம் கொண்ட ஒரு நிரந்தர வைத்தியரை நெடுந்தீவுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொண்டுவருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் நெடுந்தீவுப் பகுதியின் சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (27)

## ஜனாதிபதியுடன்...

ஆணைக்குழுவின் அறிக்கை நவம்பர் 15ஆம் திகதி வெளியாகும் என தான் எதிர்பார்பதாக அவர் குறிப்பிட்டார்.

நேற்று மாலை கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நினைவு தின வைபவததில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

## அச்சுவேலி...

1980 ஆம் ஆண்டு பாதுகாப்புக் காரணங்களுக்காகத் தொண்டைமானாறு ஊடான அச்சுவேலி - பருத்தித்துறை வீதி மூடப்பட்டது.

இந்த வீதியைத் திருத்தி மீண்டும் மக்கள் பாவனைக்குக் கையளிக்கும் பணியில் தற்போது இராணுவத்தினரின் பொறியியல் பிரிவினர் ஈடுபட்டிருப்பதாக இராணுவ ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதித் திருத்தப் பணிகளை, யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க நேரில் பார்வையிட்டுத் தேவையான உத்தரவுகளை வழங்கியதாகவும் அந்தச் செய்திக் குறிப்பில் மேலும தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போலி நாணயத் தாள்...

வங்கியின் பிராந்தியக் காரியாலயத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில், நாணயத்தாள்கள் தடிப்பாகக காணப்படும். வாள் ஏந்திய சிங்கம முப்பரிமான வடிவத்தில் காணப்படும். 2011 ஆம் ஆண்டுக்கு முன்னர் வெளியிடப்பட்ட நாணயததாள்களில் வாள் ஏந்திய சிங்கம் நிர்வரி அடையாளமாகக் காணப்படும்.

2011 ஆம் ஆண்டிற்குப் பின்னர் வெளியிடப்பட்ட நாணயத்தாள்களில் வலது பக்கம் காணப்படும் பறவை. இடது பக்கம் பார்க்கும்போது நீர்வரிப் பக்கமாகக் காணப்படும்.

அதிகமாக ஆயிரம் ரூபா, இரண்டாயிரம் ரூபாய், ஐயாயிரம் ரூபாய் தாள்களில்தான் போலி நாணத்தாள்கள் வெளிவருகின்றன.

பழைய நாணயத்தாள்களைப் பார்க்கும்போது மூன்று பண்புகளைக் கொண்டிருக்கும் புதிய நாணயத்தாள்கள் ஏழு பண்புகளைக் கொண்டிருக்கும். ஏதாவது சந்தேகங்கள் ஏற்பட்டால் நாணயத்தாள்களை மடித்துப் பார்ப்பதன் மூலம் இனங்காணக் கூடியதாக இருக்கும்.

போலி நாணயத்தாள்களை உங்கள் கைகளில் கிடைத்தால் அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்துடன் தொடர்புகொள்ள வேண்டும். எப்படி கைகளில் கிடைத்தது என்ற ஒரு அறிக்கையினைச் சமர்ப்பித்தால் போலி நாணயத்தாள் எவ்வாறு யார் மூலம் புழக்கத்திற்கு வருகின்றது என இனங்காண முடியும்.

வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் போலி நாணயத்தாள்கள தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றை நடாத்தத் திட்டமிட்டிருக்கின்றோம். போலி நாணயத்தாள்களை வைத்திருக்கும் குற்றவாளிக்கு 20 வருடங்கள் வரையான சிறைததண்டனை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (எஸ்)

## கொரியாவில்...

அதிகமாக உள்ளது. ஜனாதிபதியின் தலையீட்டில் 15 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு நியமனம் கிடைக்கவிருக்கின்றன. இலங்கை அரசாங்கத்திற்கும் கொரிய நாட்டு அரசாங்கத்திற்கும் இடையில் ஒப்பந்தம் இருப்பதனால் நீங்கள் அங்கு சென்று வேலைசெய்யச் சுலபமாக இருக்கும்.

வவுனியா, கிளிநொச்சி, யாழப்பாணம், போன்ற மாவட்ட இளைஞர்களுக்குக் கொரியா நாட்டிற்குச் செல்வதற்கான வாய்ப்புக்கள் ஏழு வருடங்களுக்கு மேலாகக் கிடைக்கவில்லை. காரணம் எங்கள் பிரதேசத்தில் ஏற்பட்ட துரதிஷ்ட செயற்பாடுகள். 2010 ஆம் ஆண்டு ஏழாயிரம் பேர் கொரிய நாட்டில் தொழில் பெற்றுள்ளனர். ஐயாயிரம் பேர் கொரிய பாஷை கற்றுள்ளனர். மூவாயிரம் பேர் கொரிய நாட்டிற்கு அனுப்பப்பட்டனர்.

மூன்று வருட வேலை செய்யக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. ஒரு இலட்சம் ரூபாய் வேதனம் நீங்கள் பெற்று உங்கள் சொந்த உழைப்பில் எங்கள் நாட்டில் சுயதொழில் செய்யும் ஆற்றலையும், பணத்தையும் சம்பாதிக்க முடியும்.

நீங்கள் இந்த 15 நாட்கள் பயிற்சி நெறியை முடித்துக் கொரிய பாஷையும் கற்று ஒக்டோபர் மாதம் நடைபெறும் பரீட்சையிலும் சித்தியடைந்து கொரிய நாட்டிற்குச் செல்லமுடியும். அதன்பின் உங்களுக்குக் கொரியாவிற்குச் செல்வதற்கான விசா வழங்கப்படும் என்று கூறினார்.(எஸ்)

# போக்குவரத்து சேவை வேண்டும்

# வடமராட்சி கிழக்கு மக்கள் கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பிரதேச கிழக்கெல்லைக் கிராமங்களில் அண்மையில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு ஒரு வாரம் முடிவடைந்த நிலையில் இவர்களுக்கான சீரான பொதுமக்கள் போக்குவரவை மேற்கொள்வதில் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

கடந்த வாரம் தொடக்கம் இலங்கைப் போக்குவரத்துச் சபை பருத்தித்துறைச் சாலையினால் நடாத்தப்படும் பருத்தித்துறை - ஆளியவளை (பாதை இல 762) சேவை தொடர்ந்தும் ஆளியவளை வரையுமே நடாத்தப்படுவதால் அண்மையில் மீளக்குடியேறிய வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், போக்கறிப்புக் கிராம மக்கள் கேவில் - யாழ்ப்பாணம் (பாதை இல 807) சேவையில ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்துச் சபை, தனியார் பஸ் வண்டிகளில் மருதன்கேணி சந்தி வரை வந்தே பருத தித்துறைக்கான தமது பயணத்தைத் தொடர்கின்றனர். இதன்போது கூடுதல் பணம் செலவாவதுடன் உரிய நேரத்திற்குச் செல்ல முடியாத நிலையிலுள்ளனர்.

ஆகவே மீளக்குடியேறிய மக்களின் நலன்கருதி தற்போது கருத்தித்துறையிலிருந்து நாகர் கோவில் ஊடாக ஆளியவளை வரை நடைபெறும் அனைத்துச் சேவைகளையும் கட்டைக்காடு - கேவில் வரை நடாத்த ஏற்ற ஒழுங்குகளைச் செய்து தரும்படி இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (70)

# இந்தியக் கார்களில் இலங்கையில் பயணிக்கலாம்

இந்தியாவில் பதிவுசெய்யப்பட்ட கார்களை கப்பல் மூலம் இலங்கைக்கு கொண்டுவந்து, இலங்கை வீதிகளில் பயன்படுத்திவிட்டு மீண்டும் இந்தியாவுக்கு கொண்டு செல்லும் வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையில் "ஸ்கோஷியா பிரின்ஸ்" எனும் பயணிகள் கப்பல் சேவையினை நடத்திவரும் இந்திய நிறுவனம் , பயணிகள் தம்முடன் கார்களையும் கொண்டு செல்வதற்கான வாய்ப்பை வழங்க முன்வந்துள்ளது.

இத்திட்டத்தின்படி, இந்தியாவிலிருந்து இலங்கைக்கு ஸ்கோஷியா பிரின்ஸ் கப்பலில் பயணம் செய்யும் இந்தியப் பயணிகள் தமது கார்களையும் அதில் ஏற்றிக்கொள்ளலாம்.

இதற்காக, சர்வதேச எல்லைக்களைக் கடந்து வாகனங்களைக் கொண்டு செல்வதற்கான "கார்னெட் டி பசேஜ்" எனும் ஆவணத்தை வாகன உரிமையாளர்கள் இந்திய மோட்டார் வாகன சங்கத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு 5000 இந்திய ரூபா செலவாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேபோல், கொழும்பை அடைந்தவுடன் இலங்கை மோட்டார் வாகன பதிவுத் திணைக்களத்தில் தற்காலிக வாகனப் பதிவுச் சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இதைப் பயன்படுத்தி இலங்கை வீதிகளில் அவ்வாகனங்களை செலுத்திச் செல்லலாம். பின்னர் அவர்கள் இந்தியாவுக்குத் திரும்பும்போது அதே கப்பலில் தமது வாகனத்தையும் ஏற்றி செல்ல வேண்டும்.

# விசேட தேவையுடையோருக்கு தகவல் தொழில்நுட்ப வசதி


விசேட தேவையுடையோருக்காகத் தகவல் தொழிநுட்ப வசதி விரிவாக்கல் செயற்திட்டம் ஒன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான வேலைத்திட்டம் இலங்கை தகவல் தொழிநுட்ப ஒழுக்காற்று ஆணையகத்தால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இது குறித்துக் கருத்து வெளியிட்ட ஆணைக்குழுவின் பணிப்பாளர் அநுஷ பெல்பிட்ட, சமூகத்தில் அங்கம் வகிக்கும் ஏனையோரைப் போன்றே, விசேட தேவையுடையோருக்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் அனைவரினதும் கடமை என குறிப்பிட்டுள்ளார்.

## செய்திப்பரணி

**காலம்சுகம் பேசும்போது காரிருளில் ஒளிதோன்றும்**
**பாலம்புது உறவுகளைப் போட்டிடும் - ஞாலமதில்**
**துட்டைகை முனுக்களும், துந்தமிழர் எல்லாளரும்**
**விட்டுப்பகை கைகுலுக்கு மாமே!**



# கிரமமான மருத்துவப் பராமரிப்பு கர்ப்பிணிகளுக்கு கண்டிப்பாக தேவை

## வலியுறுத்துகின்றனர் மருத்துவ அதிகாரிகள்

(யாழ்ப்பாணம்)

கர்ப்பிணித் தாய்மார் கிரமமான மருத்துவப் பரிசோதனைக்கு தவறாது செல்வதன் மூலம் சிசுக்களின் அநியாயமான உயிரிழப்பைத் தவிர்க்க முடியும் என்று வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நயினாதீவில் இரட்டைக் குழந்தைகள் மரணித்த சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே மருத்துவர்கள் மேற்கண்டவாறு ஆலோசனை கூறினர்.

நயினாதீவைச் சேர்ந்த புஸ்பலதா நித்தியானந்தன் என்ற தாய் கர்ப்பமடைந்து 7 மாத காலத்தில் இரட்டைக் குழந்தைகளை நயினாதீவு வைத்தியசாலையிலேயே பிரசவித்துள்ளார். அங்கு போதிய வசதிகள் காணப்படாததால் ஒரு குழந்தை குறித்த வைத்தியசாலையிலேயே இறந்துவிட்டது.

மற்றக் குழந்தையை உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றிச் சிகிச்சையளிக்கப்பட்டபோதும் அதுவும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளது.

குறித்த தாய் குழந்தை பிரசவிக்கும்வரை இரட்டைக் குழந்தைகள் வயிற்றில் இருப்பது அவருக்கோ, மருத்துவ மாதுவுக்கோ தெரியாது.

இந்தத் தாய் கர்ப்பமாகி 26 வது வாரத்திலேயே யாழ். போதனா வைத்தியசாலையில் ஸ்கான் செய்து பார்த்துள்ளார்.

கர்ப்பிணித் தாயொருவர் கர்ப்பமாகி 12 ஆவது வாரத்தில் முதலாவது ஸ்கானும், 24 ஆவது வாரத்தில் இரண்டாவதும், 36 ஆவது வாரத்தில் மூன்றாவது ஸ்கானும் செய்யப்படவேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் சிசுக்களின் இழப்புக்களை தவிர்க்க முடியும்.

குறித்த காலத்தில் கர்ப்பிணிப் பெண்கள் ஸ்கான் செய்து அதற்கு அமைவாக சிகிச்சை மேற்கொண்டால் இனிவரும் காலங்களில் இவ்வாறான இழப்புக்களை தவிர்க்க முடியுமென்று வைத்திய நிபுணர்கள் தெரிவித்தனர்.

மேலும் கர்ப்பிணிப் பெண்கள் இவ்வாறு ஒழுங்காக வைத்தியசாலைக்குச் செல்கின்றனரா என்பதை மருத்துவ மாதுக்களும் அவதானிக்க வேண்டும் என்று அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

# துணுக்காய் பிரதேச செயலகம் மிக விரைவில் புதிய கட்டடத்தில்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் பிரதேச செயலகத்திற்கு இரு மாடிக் கட்டடம் புதிதாக அமைக்கப்பட்டு வருகிறது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் வடக்கின் வசந்தம் திட்டத்தினால் இப்பிரதேச செயலக கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

கடந்த கால போரினால் சேதமடைந்த நிலையில் காணப்பட்ட இப்பிரதேச செயலக கட்டட நிர்மாணப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதால் பிரதேச செயலகப் பணிகள் தற்போது பிறிதொரு தனியார் கட்டடத்தில் செயற்பட்டு வருவதாக பிரதேச செயலக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் புதிய கட்டடப் பணிகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளதால் விரைவில் பிரதேச செயலக பணிகள் புதிய கட்டடத்தில் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, துணுக்காய் கமநல மத்திய நிலையத்திற்கும் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் புலிகளிடம் விசாரணை நாடு திரும்பியது நெதர்லாந்து குழு

(கொழும்பு)

புலிகள் தொடர்பில் இலங்கையில் நடத்தப்பட்ட விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளதாக நெதர்லாந்து அரசாங்கம் அறிவித்துள்ளது.

புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் உள்ளிட்ட சில உறுப்பினர்களிடம் நெதர்லாந்து அதிகாரிகள் விசாரணை நடத்தியுள்ளனர்.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் புலி உறுப்பினர்களிடம் இவ்வாறு விசாரணை நடத்தப்பட்டுள்ளது. குமரன் பத்மநாதன் உள்ளிட்டோரிடம் திரட்டப்பட்ட சாட்சியங்கள் எதிர்வரும் செப்டம்பர் மாதம் நெதர்லாந்து நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

மொத்தமாக 13 புலி உறுப்பினர்களிடம் விசாரணை நடத்தப்பட்டதாக இலங்கைக்கான நெதர்லாந்து தூதரகத்தின் முதல் செயலாளர் ஜாகோ பீரன்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

# இலங்கை - சீன நட்புறவு கட்டுரைப் போட்டிக்கு ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கை - சீன நட்புறவின் 62 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாதாரணதர மற்றும் உயர்தர மாணவர்களுக்கிடையே கட்டுரைப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய 3 மொழிகளிலும் நடத்தப்படும் இப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக 7500 ரூபாவும், 2 ஆம் பரிசாக 5000 ரூபாவும், 3 ஆம் பரிசாக 3000 ரூபாவும் வழங்கப்படவுள்ளது. அத்துடன் 3 பேருக்கு 1000 ரூபா வீதம் ஆறுதல் பரிசும் வழங்கப்படவுள்ளது.

"இலங்கை - சீன நட்புறவின் கடந்த காலமும் நிகழ்காலமும்" என்ற தலைப்பிலேயே கட்டுரைகள் எழுதப்படவேண்டும்.

போட்டியாளர்கள் ஏ-4 தாளில் 5 பக்கங்களுக்கு மேற்படாத வகையில் கட்டுரையை அவர்களின் கையெழுத்துப் பிரதியிலேயே எழுத வேண்டும். மாணவரின் பாடசாலை முகவரி மற்றும் வீட்டின் முகவரி குறிப்பிடப்படுவதுடன், கட்டுரையை பாடசாலை அதிபர் உறுதிப்படுத்த வேண்டும்.

கட்டுரைகள் அனைத்தும் வரும் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், இலங்கை - சீன நட்புறவுச் சங்கம், இல 5, சுதர்சன மாவத்தை, நாவல என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

பெற்றிபெறுவோருக்கான பணப்பரிசு மற்றும் விசேட பரிசுகள் செப்டெம்பர் மாத கடைசி வாரத்தில் பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# நியூசிலாந்துக் கடற்பரப்பில் இலங்கைத் தமிழர் 87 பேர் கைது

(கொழும்பு)

நியூசிலாந்துக்குள் கப்பல் மூலம் சட்டவிரோதமான முறையில் உட்பிரவேசிக்க முயன்ற இலங்கைத் தமிழர்கள் 87 பேர் கடலில் நேற்று மதியம் இடைமறித்துப் பிடிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அலிசியா என்கிற கப்பலில் சில நாட்களுக்கு முன்னர் புறப்பட்டு இருந்தனர்.

நியூசிலாந்தை ஓரளவு நெருங்கிக் கொண்டிருந்த சமயம் கடலில் ரோந்துப் பணியில் ஈடுபட்டு இருந்த இந்தோனேசிய கடல்படையினர் இவர்களை மடக்கிப் பிடித்தார்கள். கப்பலையும் கைப்பற்றினார்கள். பற்றன் என்கிற இடத்துக்கு அருகில் வைத்தே இக்கைது இடம்பெற்றது.

கைது செய்யப்பட்டவர்களையும், கைப்பற்றப்பட்ட கப்பலையும் இந்தோனேசிய கடல் படையினர் இந்தோனேசியாவுக்கு கொண்டு சென்றுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் சிறுவர்கள், பெண்கள் ஆகியோரும் அடங்குகின்றனர். நியூசிலாந்து அரசு பொறுப்பேற்று அரசியல் தஞ்சம் வழங்க வேண்டும் என்பது இத்தமிழர்களின் கோரிக்கையாக உள்ளது.

# நெடுந்தீவில் ஆசிரியர் விடுதி நிகொட் உதவியுடன் ஆரம்பம்

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவு பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் வெளியூர் ஆசிரியர்களின் நலன்கருதி புதிய ஆசிரியர் விடுதி ஒன்று அங்கு அமைக்கப்படவுள்ளது.

மேற்படி ஆசிரியர் விடுதி சுமார் 43 லட்சம் ரூபா செலவில் நிகொட் நிறுவன உதவியுடன் அமைக்கப்படவுள்ளதாக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி விடுதியின் நிர்மாணப் பணிகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், வெளியூர் ஆசிரியர்கள் முகம்கொடுத்து வரும் பிரச்சினைகளுக்கு இவ்விடுதி தீர்வாக அமையும் என சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, இதுவரை காலமும் வெளியூர்களிலிருந்து நெடுந தூரப் பயணம் செய்து பெரும் சிரமத்தின் மத்தியில் கடமையாற்றி வரும் வெளியூர் ஆசிரியர்களுக்கு இவ்விடுதியானது வரப்பிரசாதமாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (27)

# விபத்தில் மரணம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முற்பகல் இடம்பெற்ற விபத்தொன்றில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட வயோதிபப் பெண் ஒருவர் அங்கு மரணமானார்.

நவாலி தெற்கைச் சேர்ந்த 56 வயதுடைய துரைரத்தினம் மலர் என்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு மரணமானார்.

இவரது உடல் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை கண்காணிப்பாளர் தெரிவித்தார். (பா)


## ஈஸ்வரன் எக்ஸ்பிரஸ் பிரயாணிகள் போக்குவரத்து சேவை

### எமது பிரயாணிகள் கவனத்திற்கு




**ஈஸ்வரன் எக்ஸ்பிரஸ் சேவை இதுவரையிலும் நடைபெற்றது போல யாழில் இருந்து வெள்ளவத்தைக்கும், வெள்ளவத்தையிலிருந்து யாழிற்குமாக நடைபெறும் என்பதனை மிகவும் மகிழ்வுடன் எமது பிரயாணிகளுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.**

நேற்றும் நேற்று முன்தினமும் பொலிஸாரின் திடீர் அறிவிப்பால் யாழ்., கொழும்பு (வெள்ளவத்தை) பிரயாணிகள் போக்குவரத்து சேவை குழப்பமடைந்து இருந்தது.

ஆனால் எமது முயற்சியால் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டது. இதற்கு உதவி புரிந்த, உறுதிப்படுத்திய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்களிற்கும், ஜனாதிபதி செயலாளர் அவர்களிற்கும், கொழும்பு மாவட்ட பொலிஸ் மா அதிபர் அவர்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஈஸ்வரன் எக்ஸ்பிரஸ்**
**பிரயாணிகள் போக்குவரத்து சேவை**

69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

201, டாம் ஸ்ரீற் கொழும்பு - 12

(C/809)



## அலுவலக செய்தியாளர்கள் தேவை

எமது பத்திரிகை நிறுவனத்தில் அலுவலக செய்தியாளராகப் பணியாற்றுவதற்கு அனுபவமும் திறமையும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர் –

- யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பது விரும்பத்தக்கது. க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- தமிழ் மொழியில் திறமையும் ஆங்கில/சிங்கள அறிவும் விரும்பத்தக்கது.
- பத்திரிகை நிறுவனங்களில் செய்தியாளராகப் பணியாற்றிய அனுபவம் அல்லது பத்திரிகைத் துறையில் அதீத ஆர்வமும் துடிப்பும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
- வெளிக்கள வேலையில் ஈடுபடத்தக்க உடல் ஆரோக்கியம் உள்ள 35 வயதுக்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'அலுவலக செய்தியாளருக்கான விண்ணப்பம்' என்று தவறாமல் குறிப்பிடவும்.
- விண்ணப்பங்கள் அனைத்தும் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர்

**'ஆளணி முகாமையாளர்'**

**'தினமுரசு' இல 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்**

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூலை 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.